தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

7.03.2013 A.M

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.88 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 33.88 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 342 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 1.60 டி.எம்.சி.

## செம்மாம்பாளையம் மஞ்சள் வணிக வளாகத்தை திறக்க வலியுறுத்தல்

ஈரோடு செம்மாம்பாளையத்தில் மஞ்சள் வணிக வளாகத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட அனைத்துத் தொழில்வணிகச் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து முதல்வருக்கு இச் சங்கத் தலைவர் என்.சிவநேசன் புதன்கிழமை அனுப்பிய மனு:

மஞ்சள் வியாபாரம் ஈரோட்டில் அதிக அளவில் நடைபெறுவதால், இட பற்றாக்குறை ஏற்பட்டு மாநகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இவற்றுக்கு தீர்வுகாண ஈரோடு புறநகர் பகுதியான செம்மாம்பாளையத்தில் சுமார் 50 ஏக்கர் நிலம் மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்கத்தினரால் வாங்கப்பட்டு மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஏலம்விடும் இடம், கிடங்கு, விவசாயிகள் ஓய்வறை, கேண்டீன், கழிப்பிட வசதி, வாகன நிறுத்தம் ஆகிய வசதிகள் அமைந்துள்ளன. நகருக்குள் விவசாயிகள் மஞ்சள் மூட்டையை 200-க்கும் மேற்பட்ட லாரிகள், டிராக்டர், டெம்போ மூலம் கொண்டு வருவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விவசாயிகளும், பொதுமக்களும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாக உள்ளதால், விவசாயிகள் நகருக்குள் வரும்போது விதிமுறை தெரியாமல் அபராதக் கட்டணம் செலுத்த ஆளாகின்றனர்.

மஞ்சள் மாநகரத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், மற்ற தொழில் வளர்ச்சிக்கு

உறுதுணையாகவும் அமைய ஈரோட்டில் பூங்கா சாலையில் நெரிசலான இடத்தில் இயங்கும் மஞ்சள் வணிக மையத்தை புதிதாக அமைந்துள்ள செம்மாம்பாளையம் மஞ்சள் வணிக வளாகத்துக்கு இடமாற்றம் செய்ய மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க முதல்வர் உத்தரவிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## நீலகிரியில் பரவலாக மழை!

பனியின் பிடியில் சிக்கியிருந்த நீலகிரி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவிலிருந்து பரவலாக மழை பெய்து வருகிறது.

÷உதகை, குன்னூர் பகுதிகளில் புதன்கிழமை காலையிலிருந்து நிலவிய கடுமையான மேகமூட்டத்தின் காரணமாக முகப்பு விளக்கு போட்டும் வாகனங்களை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. புறநகர்ப் பகுதிகளில் வீசிய பலத்த காற்றின் காரணமாக கடுமையான குளிரும் நிலவியது.

÷நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களாகக் கடும் பனியின் காரணமாக பெரும்பாலான பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கியிருந்தன. வறட்சியின் காரணமாக வனத் தீயும் ஏற்பட்டது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இரவிலிருந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்யத் தொடங்கியது. உதகையில் இரவு சுமார் 9 மணிக்கு தொடங்கிய மழை 2 மணி நேரம் நீடித்தது. அதைப்போலவே மாவட்டத்தின் பிற பகுதிகளிலும் சுமாரான மழை பெய்துள்ளது.

÷மாவட்டத்தின் பல பகுதிகளிலும் புதன்கிழமை பகலில் மழை இல்லாவிட்டாலும் கடுமையான காற்றும், அதன் காரணமாக குளிரும் இருந்தது. அதைப்போலவே கடுமையான மேக மூட்டத்தின் காரணமாக பகலிலேயே வாகனங்கள் முகப்பு விளக்கை போட்டும் ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டது. குறிப்பாக குன்னூர்-மேட்டுப்பாளையம் சாலையிலும், கோத்தகிரி-மேட்டுப்பாளையம் சாலையிலும் நிலவிய மேகமூட்டத்தால் வாகனங்கள் ஊர்ந்துத்தான் சென்றன.

நீலகிரியில் கனமழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக புதன்கிழமை மாலையிலிருந்து கிராமங்களுக்கு செல்ல வேண்டிய மக்கள், தங்களது பகுதிகளுக்கு விரைந்து சென்றுவிட்டதால் சாலைகளில் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

தற்போது பெய்துவரும் மழை தேயிலை பயிருக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

÷மழையின் காரணமாக நீராதாரங்களில் நீர்வரத்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், குடிநீர்

பிரச்னைக்கும் ஓரளவு தீர்வு ஏற்படும். அத்துடன் வனப்பகுதிகளில் வனத்தீ0 அபாயம் தவிர்க்கப்படுவதோடு, வனவிலங்குகளின் குடிநீர்ப் பிரச்னைக்கும் தாற்காலிகமாக தீர்வு ஏற்பட்டுள்ளது.

÷மாவட்டத்தில் புதன்கிழமை காலை வரை 76 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் பதிவான மழை விபரம் வருமாறு (அளவு மி.மீரில்):

குன்னூர் - 19.6, கோத்தகிரி - 14, உதகை - 13.4, குந்தா மற்றும் கேத்தி தலா 11, அவலாஞ்சி - 4, எமரால்டு - 2, அப்பர்பவானி 1 மி.மீ.

## 8 பஸ்களில் சென்னை புறப்பட்ட விவசாயிகள்: இன்று கருத்து கேட்புக் கூட்டம்

விளை நிலங்களில் குழாய் மூலமாக எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளிடம் கருத்துக் கேட்கும் கூட்டம், சென்னையில் இன்று நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக திருப்பூரில் இருந்து 8 பேருந்துகளில் 350-க்கும் மேற்பட்ட விவசாயிகள் புதன்கிழமை இரவு புறப்பட்டுச் சென்றனர்.

கேரள மாநிலம், கொச்சியில் இருந்து பெங்களூருக்கு குழாய் மூலமாக எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை மத்திய அரசின் கெயில் நிறுவனம் (கேஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா) மேற்கொண்டுள்ளது. கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 136 கிராமங்களில் விவசாய நிலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் வழியாக எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்பட உள்ளன.

விளை நிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய் அமைப்பதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், போலீஸ் பாதுகாப்புடன் பணியை "கெயில்' மேற்கொண்டு வருகிறது. இந் நிலையில், விவசாயிகளை அழைத்து கருத்து கேட்புக் கூட்டம் நடத்துமாறு தலைமைச் செயலருக்கு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி, திருப்பூர் மாவட்டத்தில் இத் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அழைப்பு விடுத்து கடிதம் அனுப்பியது. இதையடுத்து,

திருப்பூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து 102 விவசாயிகள் 2 பேருந்துகளிலும், பல்லடத்தில் இருந்து 5 பேருந்துகளில் 199 பேரும், அவிநாசியில் இருந்து ஒரு பேருந்தில் 44 பேரும் என 350-க்கும் மேற்பட்டோர், கோட்டாட்சியர் (பொறுப்பு) அசோகன் மற்றும் பல்லடம் வட்டாட்சியர் விஜயகுமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

மேலும், விவசாயிகள் பலரும் ரயில், கார், ஆம்னி பேருந்துகளிலும் சென்னை சென்றுள்ளனர்.

## குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை:தமிழகத்தில் மழை தொடரும்

இலங்கைக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகத்தில் மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இது இலங்கை தென் கடல் பகுதியில் இருந்து தென்மேற்கு வங்கக் கடல் வரை பரவியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது.

இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால், தமிழகம் மற்றும் புதுவையில் ஓரிரு நாள்களுக்கு மழை தொடரும் என்றும், சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

ஒரே நாளில்10 அடி உயர்ந்தது சேர்வலாறு அணை: மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்த மழையால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1834.51 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 274 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 340 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 68 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2.55 அடி உயர்ந்து 44.50 அடியாக இருந்தது. ஒரே நாளில் சேர்வலாறு அணை 10 அடி உயர்ந்து 64.96 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.60 அடியாக இருந்தது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 7.40 அடி உயர்ந்து 54.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 5.50 அடி உயர்ந்து 38 அடியாகவும் இருந்தது.

நீரில் மிதக்கும் நெற்ப்பயிர்: அம்பாசமுத்திரம் வட்டத்தில் கன்னடியன் கால்வாய், வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய் பாசனத்தில் அம்பை, விக்கிரமசிங்கபுரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, பத்தமடை, முக்கூடல், கடையம் பகுதிகளில் மழை பெய்து வருவதால் நெற்பயிர்கள் நீரில் மிதக்கின்றன. வயலில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தொடர் மழை காரணமாக மாலையில் பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் அதிகரித்தது. இதையடுத்து அணைகள் மூடப்பட்டன.

தமிழகத்தில் பதிவான மழை விவரம் (புதன்கிழமை காலை நிலவரம் - மி.மீ.): மணிமுத்தாறு - 120, பேராவூரணி - 110, அறந்தாங்கி - 90, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை - 80, அதிராமப்பட்டினம், மன்னார்குடி - 70, ஒரத்தநாடு - 60, கமுதி, தொண்டி, திருவாரூர், ஆலங்குடி, சிவகங்கை, திருமயம், காரைக்குடி, ராமேசுவரம் - 50, திருபுவனம், திருப்பத்தூர், தூத்துக்குடி, சாத்தூர், பாம்பன் - 40, அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, ராமநாதபுரம், பரமக்குடி, கந்தர்வக்கோட்டை, கீரனூர், கடலூர், நீடாமங்கலம், சீர்காழி, வேதாரண்யம், மேலூர், திருச்செந்தூர், கொடைக்கானல், நத்தம் - 30, பாளையங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம், காட்டுமன்னார்கோவில், அருப்புக்கோட்டை, குன்னூர், தஞ்சாவூர், உசிலம்பட்டி - 20, மதுரை, தென்காசி, சங்கரன்கோவில், திண்டுக்கல், ஊட்டி, சிவகாசி, விருதுநகர், நாகப்பட்டினம், கும்பகோணம், திருவையாறு, திருச்சி - 10.

## கொட்டித் தீர்த்த மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி; விவசாயிகள் கவலை



சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் மழையினால் வறட்சியின் பிடியில் சிக்கி இருந்த பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காவிரி டெல்டா கடை, மடை பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டங்களில் இந்த ஆண்டு மழை பொய்த்ததாலும், மேட்டூரிலிருந்து நீர் கிடைக்காததாலும், கடும் மின்வெட்டினால் விவசாய சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழக அரசு முதல்முறையாக வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு பயிர் காப்பீடுத் தொகை சேர்த்து ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணத்தை வழங்கி வருகிறது. மேலும் போதிய மழை இல்லாததாலும், நீர்நிலைகளில் நீர் வற்றியதாலும் நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து போனதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

காட்டுமன்னார்கோவில் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக பலத்த மழை பெய்துள்ளது. சிதம்பரம் பகுதியில் புதன்கிழமை காலை முதல் விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இதனால் வறட்சியின் பிடியில் சிக்கியிருந்த பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

விவசாயிகள் கவலை: உளுந்து சாகுபடியில் ஈடுபட்டுளள விவசாயிகள் தொடர்ந்து மழை பெய்தால், உளுந்து பயிருக்கு பாதிப்பு ஏற்படும் என கவலையில் உள்ளனர். மேலும் தாமதமாக பயிர் சாகுபடியில் ஈடுபட்டு தற்போது அறுவடைப் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இந்த மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நெல் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வைக்கோல் மூலம் விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்கும்.

இந்நிலையில் இந்த மழையால் 5 ஆயிரம் ஏக்கரில் உள்ள வைக்கோல்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடலூரில்...

கடலூர், மார்ச் 6: கடலூரில் புதன்கிழமை காலை கனமழை பெய்ததால் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியுள்ளது. வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலைக் காரணமாக மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை.

தமிழக கடலோர மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை முதல் கனமழை பெய்து வருகிறது. கடலூர் மாவட்டத்தில் புதன்கிழமை காலை 7 மணி முதல் கனமழை பெய்யத் தொடங்கியது.

தொடர்ந்து மாலை வரை இடைவிடாது மழை பெய்தது. இதனால் தாழ்வானப் பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது.

லாரன்ஸ் ரோடு, இம்பீரியல் ரோடு, பாரதி சாலை உள்ளிட்ட முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

காலை 9 மணி வரை கனமழை நீடித்தால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் கடும் அவதியடைந்தனர். மதியம் வரை பெய்த தொடர் மழையால் கடலூரில் வசிக்கும் பெரும்பாலானோர் வீடுகளிலேயே முடங்கியதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மாவட்டம் முழுவதும் இதே நிலை நீடித்தது. மழை அளவு விவரம் (மி.மீ): கடலூர் 31.40, காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை 21, பண்ருட்டி, வானமாதேவி 16, சேத்தியாத்தோப்பு 14,

கொத்தவாச்சேரி 10, சிதம்பரம் 6, அண்ணாமலை நகர் 5.60, ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி 5, லால்பேட்டை- 21.

**மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை**

கடலில் பலத்த காற்று வீசுவதுடன், அலை சீற்றமும் அதிகமாக காணப்பட்டது. வழக்கத்தைவிட இரண்டு மீட்டர் உயரத்துக்கு அலைகள் எழும்பின.

தாழங்குடா, தேவனாம்பட்டினம், சோனங்குப்பம், சொத்திக்குப்பம், ராசாபேட்டை உள்ளிட்ட அனைத்து கிராம மீனவர்களும் கடலுக்குள் இரண்டு நாட்களாக செல்லவில்லை. 90 சதவீத மீனவர்கள் கடலுக்குள் செல்லாததால் முதுநகர் மீன்பிடி துறைமுகம், தேவனாம்பட்டினம், தாழங்குடா கரையோரப் பகுதிகளில் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மீன்வரத்து இல்லாததால் வியாபாரமின்றி கடலூர் மீன்பிடி துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது.

## மழையில் சேதமடைந்த பல ஆயிரம் நெல் மூட்டைகள்: விவசாயிகள் சாலை மறியல்



திருக்கோவிலூரை அடுத்த அரகண்டநல்லூர் மற்றும் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வியாபாரிகளின் ஆக்கிரமிப்பால் குடோன்களில் இடமின்றி திறந்தவெளியில் வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் நெல்மூட்டைகள் மழையில் சேதமடைந்தன.

வியாபாரிகளின் இந்த அடாவடி போக்குக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூட நிர்வாகம் துணைபோவதாகக் கூறி விவசாயிகள் கொட்டும் மழையில் புதன்கிழமை திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரை அடுத்த அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நெல் மற்றும் எள், மணிலா வரத்து அதிகரித்துள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட தானிய மூட்டைகளை 24 மணி நேரத்துக்குள் வாகனங்கள் மூலம் வெளியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பது விதி.

ஆனால், விற்பனைக்கூட நிர்வாகத்தின் ஆதரவோடு உள்ளூர் வியாபாரிகள் இக்கூடத்தில் உள்ள குடோன்களை ஆக்கிரமித்து தங்களது மூட்டைகளை மாதக்கணக்காக அடுக்கி வைப்பதாக கூறப்படுகிறது.

இதனால், குடோனில் இடவசதியின்றி விவசாயிகள் தங்களது விளைப் பொருள்களை திறந்தவெளியில் கட்டாந்தரையில் வைக்க வேண்டியுள்ளது. இந்நிலையில், இப்பகுதியில் புதன்கிழமை காலை 6 மணி முதல் பகல் 1.30 மணி வரை மழை தொடர்ந்து பெய்தது. இதன்காரணமாக திறந்தவெளியில் கட்டாந்தரையில் வைக்கப்பட்டிருந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்துபோனது.

இதையடுத்து வியாபாரிகளின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கும் குடோன்களை மீட்க வேண்டும், மழையில் நனைந்த மூட்டைகளுக்கு நியாயமான விலை கிடைத்திட வேண்டும், மழையால் நின்ற கொள்முதல் பணியை உடன் தொடங்கிட வேண்டும் என்று வலியுறுத்தியும், வியாபாரிகளின் அடாவடி போக்குக்கு துணைபோகும் விற்பனைக்கூட நிர்வாகத்தைக் கண்டித்தும் விவசாயிகள் புதன்கிழமை திடீரென கொட்டும் மழையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த அரகண்டநல்லூர் போலீஸார் மற்றும் வருவாய்த்துறையினர் விரைந்து வந்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியதின் பேரில் மறியல் கைவிடப்பட்டது. இந்த மறியலால் திருக்கோவிலூர்-விழுப்புரம் பிரதானச் சாலையில் சுமார் 1 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

விழுப்புரம்: விழுப்புரம் ஒருங்கிணைந்த வேளாண் விற்பனைக் கூடத்தில் குடோனில் இடமின்றி திறந்தவெளியில் வைக்கப்பட்ட விவசாயிகளின் நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன. இதனை காரணம்காட்டி அதிகாரிகள் மூடைக்கு ரூ. 150 வரை விலை குறைத்ததால், ஆவேசமடைந்த விவசாயிகள் புதன்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

விழுப்புரத்தில் புதுச்சேரி சாலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ள 3 குடோன்களிலும் வியாபாரிகள் ஏற்கெனவே கொள்முதல் செய்த நெல் மூட்டைகளே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், விவசாயிகள் புதன்கிழமை விற்பனைக்கு கொண்டுவந்த நெல் மூட்டைகள் வைக்க இடமில்லாமல், திறந்தவெளியில் வைக்கப்பட்டன. காலை முதல் பெய்த மழையில் நெல் மூட்டைகள் நனைந்தன.

மழையில் நெல் நனைந்ததை காரணம் காட்டி, அதிகாரிகள் மூட்டைக்கு ரூ. 110 முதல் 130 வரை குறைவாக கொள்முதல் செய்வதாக கூறியுள்ளனர். இதனால் 250க்கும் மேற்பட்ட விவசாயிகள் புதுச்சேரி சாலையில் பகல் 2.30க்கு மறியலில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் நகர காவல் நிலைய ஆய்வாளர் ராமநாதன், சாலை மறியலில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்தினார். பின்னர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட செயலாளர் ஞானவேல், கண்காணிப்பாளர் எஸ்.கிருஷ்ணதாஸ், விழுப்புரம் நகர காவல்நிலைய ஆய்வாளர் ராமநாதன் ஆகியோர் தலைமையில் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

குடோன்களில் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்த நெல் மூட்டைகள் அப்புறப்படுத்ததாலேயே கொண்டுவந்த நெல் மூட்டைகள் திறந்தவெளியில் வைக்கப்பட்டு மழையில் சேதமடைந்தன. குடோன்களில் விவசாயிகள் கொண்டுவரும் தானிய மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க வசதி ஏற்படுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை கொள்முதல் நிலையத்திலும் புதன்கிழமை 5,000 மூட்டை நெல் கொள்முதலுக்காக விவசாயிகள் கொண்டுவந்திருந்தனர். மழையில் நெல் மூடைகள் நனைந்ததால், அதிகாரிகள் திங்கள் கிழமை அந்த மூட்டைகளை கொள்முதல் செய்ய கொண்டுவரும்படி கூறி அனுப்பிவிட்டனர்.

## விவசாயக் கடன் தள்ளுபடி திட்டத்தில் முறைகேடு நடைபெறவில்லை

ரூ.52 ஆயிரம் கோடி விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தில் எந்த நிதி முறைகேடும் நடைபெறவில்லை என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் ரூ.52 ஆயிரம் கோடி விவசாயக் கடன் தள்ளுபடித் திட்டத்தில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி.) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ரூ.10 ஆயிரம் கோடி ஊழல் நடைபெற்றிருப்பதாக பா.ஜ.க. குற்றம் சாட்டியுள்ளது. இந்த விவகாரம் குறித்து வேளாண்துறை அமைச்சர் சரத் பவார், தில்லியில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியது:

விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வது என்று மத்திய அரசு முடிவு செய்தது. இதற்காக வங்கிகளுக்குப் பணம் அனுப்பப்பட்டது. ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கியின் மேற்பார்வையின் கீழ், வங்கிக் கணக்குகள் மற்றும் பயனாளிகளின் பட்டியலை வங்கிகள் தேர்வு செய்தன. பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் நேரடியாக மாற்றப்பட்டது. இதில் முறைகேடு என்ற கேள்வி எங்கிருந்து வந்தது?

எனினும், வங்கிகள் தயாரித்த பயனாளிகள் பட்டியலில், கடன் பெறத் தகுதி படைத்த விவசாயிகளின் பெயர்கள் சேர்க்கப்படாமல் போனதற்கும், தகுதியற்ற விவசாயிகள் சேர்க்கப்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. மொத்தமுள்ள 3.7 கோடி வங்கிக் கணக்குகளில், வெறும் 90,576 கணக்குகளை மட்டுமே சி.ஏ.ஜி. அமைப்பு மாதிரிக்கு எடுத்துக் கொண்டது. இதற்கு, 0.25 சதவீத கணக்குகள் மட்டுமே தணிக்கை செய்யப்பட்டன என்று அர்த்தம். இந்தியா முழுவதும் அமல்படுத்தப்பட்ட இவ்வளவு பெரிய திட்டம் குறித்து, இவ்வளவு சிறிய எண்ணிக்கையைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவதா? கணிசமான வங்கிக் கணக்குகளைக் கொண்டு இந்தத் தணிக்கையை சி.ஏ.ஜி. மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் சரியான முடிவுகள் கிடைக்கும்.

சி.ஏ.ஜி.யின் முதற்கட்ட அறிக்கை கிடைத்ததைத் தொடர்ந்து, மத்திய நிதி அமைச்சகம் ஒரு கடிதத்தை ரிசர்வ் வங்கிக்கும், நபார்டு வங்கிக்கும் எழுதியது. அதில், "சி.ஏ.ஜி. மேற்கொண்ட தணிக்கை போதுமானது அல்ல என்றும் கூடிய விரைவில் அனைத்து வங்கிக் கணக்குகளும் தணிக்கை செய்யப்பட வேண்டும்' என்றும் குறிப்பிட்டது. கடன் பெறத் தகுதியற்ற விவசாயிகளிடம் இருந்து, ஏற்கெனவே அளித்த பணத்தை வங்கிகளால் மீட்க முடியும். தகுதியுள்ள விவசாயிகளுக்கு பலன்களை அளிப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்க வேண்டியுள்ளது. இப்போது இந்த விஷயத்தில் பட்ஜெட் ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனினும், இதில் என்ன செய்யலாம் என்று நாங்கள் யோசிப்போம் என்றார் பவார்.

### இதிலுமா ஊழல்?

2008-ஆம் ஆண்டு மே மாதம் அறிவிக்கப்பட்ட விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ நான்கு கோடி விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று கூறப்பட்டது. அப்படி கடன் தள்ளுபடி செய்யப்பட்ட 90,576 கணக்குகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டதில் 20,216 விவசாயக் கணக்குகள், இந்த நிவாரணம் மற்றும் கடன் ரத்துக்கு தகுதியில்லாதவை என்பது இப்போது அம்பலமாகி இருக்கிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினால் கடந்த நான்கு ஆண்டுகளில் விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரணம் திட்டத்தில் பயனடைந்த 22 சதவீதம் பேர் "தகுதியில்லாத விவசாயிகள்' என்று தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி.) அலுவலகம் அறிக்கை அளித்திருக்கிறது.

உண்மையில் இந்த திட்டத்தால் பயனடைந்த 3.69 லட்சம் குறு, சிறு விவசாயிகள் மற்றும் 60 லட்சம் "வசதிபடைத்த' விவசாயிகளின் கடன் கணக்குகளை முறையாகப் பரிசீலித்தால், ரூ. 52,000 கோடியில், பாதிகூட தகுதியுடைய விவசாயிக்குப் போய்ச்சேரவில்லை என்பது உறுதிப்பட்டிருக்கும்.

ஆய்வு செய்யப்பட்ட இந்தக் கணக்குகளில் தகுதியுடைய விவசாயிகள் 13 சதவீதம் பேருக்குக் கடன் வழங்க வங்கிகள் மறுத்துள்ளன என்பது அதைவிட வேதனை. இத்தகைய ஊழலுக்கு முழுமுதற் காரணம் - வங்கிகள். கடன் வழங்கும்போது, விவசாயிகளின் பெயர், அவர் கடன் பெற்ற ஆண்டில் எந்த "சர்வே' எண்ணில் உள்ள நிலத்தில் என்ன பயிர் செய்திருந்தார் என எல்லா விவரங்களையும் திரட்டி, கடன் நிவாரணம் பெற்ற தொகை மற்றும் கடன் தள்ளுபடி அல்லது நிவாரணம் அளிக்கப்பட்ட விவரம் ஆகியவற்றை இணையதளத்திலும் அந்தந்தக் கிளையின் வாசலிலும் வெளியிட்டிருந்தால், குறைந்தபட்சம் ஒரு சில விவசாயிகளாவது இதைப் படித்து, இதில் "தகுதியற்ற விவசாயிகள்' இருப்பதைச் சுட்டிக் காட்டியிருப்பர்.

ஆனால், வங்கிகள் இந்த வேளாண் கடன் விவகாரத்தில் மூடுமந்திரமாகவே செயல்படுவதால்தான் இந்த ஊழல் தொடக்க நிலையிலேயே அம்பலப்படுத்த வழியில்லாமல் போகிறது. வங்கி அதிகாரிகளுக்கும் இதில் பங்கு இருக்குமோ என்னவோ யார் கண்டது?

இரண்டாவது காரணம் - மாவட்ட ஆட்சியர்களின் அக்கறையின்மை. மாவட்டத்தில் உள்ள எல்லா வங்கிகளையும் அழைத்து, கூட்டம் நடத்தி, பல ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்குவதற்காக ஆண்டுதோறும் இலக்கு நிர்ணயிப்பவர் ஆட்சியர்தான். இந்த இலக்கு எட்டப்பட்டதா என்பதை ஆட்சியருக்கு உதவியாக இருந்து பார்த்துக்கொள்ள, வங்கிகளில் ஏதேனும் ஒரு வங்கி, முன்னோடி வங்கியாக (லீடு பாங்க்) இருந்து செயல்படுவதும் வழக்கமாக இருக்கிறது. இலக்கு நிர்ணயிப்பதுடன் தமது கடமை முடிந்துவிட்டது என்று மாவட்ட ஆட்சியர்கள் ஒதுங்கிக் கொள்வதும், இந்த ஊழலுக்கு ஒரு காரணம். இலக்கு நிர்ணயிக்கப்பட்டாலும், வேளாண் கடன் வழங்குவதில் எந்த வங்கிக்கும் ஆர்வம் கிடையாது என்பதே கசப்பான உண்மை.

வங்கி மேலாளர்கள், கடனைத் திரும்பச் செலுத்தக்கூடிய பணக்கார அல்லது "விவசாயம் செய்யாத' விவசாயிக்குக் கடன்களை அளித்து, இலக்குகளை எட்டுகிறார்கள். டிராக்டர் வாங்குதல், கதிரடிக்கும் இயந்திரம் வாங்குதல், உரம் வாங்குதல் என்று பல பெயர்களில், திரும்பச் செலுத்தக்கூடிய விவசாயிகள் என்று கருதுவோருக்கு மட்டுமே வள்ளல்போல அள்ளி வழங்குகின்றன இந்த வங்கிகள்.

இன்னும் சில வங்கி மேலாளர்கள் "பண்ணைசாரா வேளாண்மைக் கடன்' என்ற பெயரில் தொழில் தொடங்கவும் கடன் தருகிறார்கள். விவசாயிகள் தங்க நகைக் கடன் பெற்றால் அதற்கு வட்டி மிகமிகக் குறைவு. இவ்வாறு குறைந்த வட்டியில் "கோல்டு லோன்' பெறுவோரில் 75 சதவீதம்பேர் விவசாயிகள் அல்ல. இவர்கள் வங்கி ஊழியர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் அல்லது இதர வாடிக்கையாளர்களாகவே இருப்பார்கள். சில கிளைகளில், தங்க நகையின்பேரில் குறைந்த

வட்டியில் கடன் வாங்கி அதை வெளியே கந்துவட்டிக்கு விடும் அற்புதங்களும் நடந்தேறிக்கொண்டுதான் இருக்கின்றன.

சில விவசாயிகள் தங்களிடம் "சிட்டா' புத்தகம் வைத்திருப்பார்கள். ஆனால், அங்கே குத்தகைக்கு வியர்வை சிந்தும் விவசாயி வேறு யாராகவோ இருப்பார். ஆயினும் அவர் கடன் பெறுவார். கடன் தள்ளுபடிக்குத் தகுதி பெறுவார். வட்டித் தள்ளுபடி, அசல் தள்ளுபடி, குறுகியகாலக் கடன் நீண்டகாலக் கடனாக மாறுதல் என எல்லா சலுகைகளும் இவருக்குக் கிடைக்கும். வங்கி அதிகாரிகளுக்குத் தெரியாமலா இது நடக்கிறது?

அண்மையில் புதுக்கோட்டையில் நடைபெற்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பேரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஒரு தகவல்: தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வேளாண் கடன் தொகையில், 7 சதவீதத் தொகை சென்னையில் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் எந்த விவசாயி, உழுது பயிர் செய்கிறான் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

நியாயமான இந்தக் கேள்வியை சங்கக் கூட்டத்தில் எழுப்பி என்ன பயன்? எந்தெந்த வங்கிகள் இத்தகைய கடன்களைக் கொடுத்தன, இதனால் பயனடைந்த விவசாயிகள் யார் என்று பட்டியலைப் பெற்று அம்பலப்படுத்தியிருக்க வேண்டாமா? வங்கி ஊழியர் சங்கம் அதைச் செய்யாவிட்டால் வேறு யாரால் இதைச் செய்ய முடியும்?

ஒருபுறம் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வது நடந்துகொண்டே இருக்கிறது. இன்னொருபுறம் இதைக் காரணம் காட்டி கடன் தள்ளுபடி, கடன் நிவாரணத்தை அரசு அறிவிக்கிறது. அப்படி அறிவிக்கப்படும் தள்ளுபடி மற்றும் நிவாரணம் தகுதியான விவசாயிகளுக்கும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் முறையாகப் போய்ச் சேருவதில்லை என்றால், இந்த அறிவிப்புகளால் என்னதான் பயன்?

மக்கள் வரிப்பணம் எப்படியெல்லாம் ஒரு சிலரால் சட்டபூர்வமாகக் களவாடப்படுகிறது என்பதையும், சட்டங்களும் விதிகளும் பண பலமும், அதிகார பலமும், அடியாள் பலமும் உள்ளவர்களின் தவறுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பதையும்தான் வெளியாகி இருக்கும் இந்த ஊழல் உறுதிப்படுத்துகிறது. விவசாயிகளின் வயிற்றிலும் அடிக்கிறார்களே, பாவிகள்!

## ஊடுபயிராக ஆமணக்கு சாகுபடி



ஆமணக்கு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா பரப்பளவிலும், உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் மட்டும் சுமார் 14 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் 3 ஆயிரத்து 750 டன் ஆமணக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 1,100 ஹெக்டர் பரப்பளவில் ஆமணக்கு சாகுபடி செய்யப்படுகிறது.

ஆமணக்கு எண்ணெய் உண்ணா வகையைச் சார்ந்தது. இதில் 50 சதவீதத்துக்கும் மேலாக எண்ணெய்ச் சத்து உள்ளது. ஆமணக்கில் இருந்து மருந்துப் பொருள்கள் தயாரிக்கப்

படுகின்றன. இந்த எண்ணெய் பெயின்ட், வார்னிஷ் தயாரிக்கவும் மூலப் பொருள்களாகப் பயன்படுகிறது. மேலும், இதரப் பயிர்களுடன் பொறிப் பயிராக பயிரிடும் போது அந்தப் பயிர்களில் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

ஆமணக்கு சாகுபடி செய்வது தொடர்பாக டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தரராஜ் கூறும் வழிமுறைகள்:

பருவம்: ஆமணக்கு தனிப் பயிராகப் பயிரிட மானாவாரி-ஜூன், ஜூலை (ஆடிப் பட்டம்) மற்றும் இறவை செப்டம்பர்-அக்டோபர் (கார்த்திகை பட்டம்) மாதங்கள் சிறந்தவையாகும். ஊடு பயிராக எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம்.

ரகங்கள்: டிஎம்வி-4 (105 நாள்கள்), டிஎம்வி-5 (120 நாள்கள்), டிஎம்வி-6 (160 நாள்கள்), எ.எம்.வி.எச்-1 (160 நாள்கள்), ஒய்.ஆர்.சி.எச்.1 (150 நாள்கள்) ஆகிய ரகங்களைப் பயிரிடலாம்.

நிலத் தன்மை: டிராக்டர் அல்லது நாட்டு6க் கலப்பை மூலம் 2-3 முறை நிலத்தை நன்கு கட்டி இல்லாமல், புழுதிபட உழ வேண்டும். வடிகால் வசதியுடன் கூடிய கார, அமிலத் தன்மையற்ற வண்டல், செம்மண் நிலங்கள் மிகவும் உகந்தவை. கடைசி உழவில் 5 டன் மக்கிய தொழு உரமிட்டு உழ வேண்டும். தனிப் பயிரானால் நிலத்தை பார்கள் அமைத்து நீர் பாய்ச்ச ஏதுவாக தயார் செய்ய வேண்டும்.

விதை: சிறந்த தரமான விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு ஹெக்டருக்கு தனி பயிரானால் 10 கிலோ விதை தேவைப்படும். கலப்புப் பயிராக அல்லது ஊடு பயிராக இருந்தால் 3 கிலோ விதைகள் போதுமானது. வீரிய ஒட்டு ரகமானால் 5 கிலோ விதைகள் தேவைப்படும்.

விதை நேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் உயிர்ப் பூசணம் டிரைக்கோடெர்மா கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைப்பு: விதைகளை விதைக்கும் முன்பு 24 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து விதைத்தால் முளைப்புத் திறன் அதிகரிக்கும். ஒரு குழிக்கு ஒரு விதை போதுமானது. விதைகளை பரிந்துரை செய்யப்பட்ட இடை வெளியில் விதைக்க வேண்டும். மானாவாரிப் பயிராக இருந்தால் 90-க்கு 60 செ.மீ. இடைவெளியிலும், இறவையில் பயிரிட்டால் 120-க்கு 90 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும்.

உரமிடுதல்: பொதுவாக மண் பரிசோதனை முடிவுக்கு ஏற்ப உரமிட வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிடில், பரிந்துரைக்கப்பட்ட அளவான ரகத்திற்கு 30:15:15 கிலோ தழைச்சத்து, மணி சத்து, சாம்பல் சத்து இட வேண்டும். மானாவாரி ஒட்டு ஆமணக்கிற்கு 45:15:15 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இட வேண்டும்.

இதில் 30:15:15 அடியுரமாகவும், மீதமுள்ள 15 கிலோ தழைச் சத்தை மேலுரமாக மழை வரும் போது 40-60 நாள்களுக்குள் இட வேண்டும்.

இறவை வீரிய ஒட்டு ஆமணக்கிற்கு 60:30:30 கிலோ தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இட வேண்டும். இதில் 30:30:30 கிலோ தழை, மணி, சாம்பல் சத்தை அடி உரமாகவும், மீதமுள்ள 30 கிலோ தழைச்சத்தை 2 தவணைகளாகப் பிரித்து 30ஆவது நாளும், 60ஆவது நாளும் இட வேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைத்தவுடன் உயிர்த் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 15 நாள்கள் இடைவெளியில் மண்ணின் தன்மைக்கு ஏற்ப நீர் பாய்ச்ச வேண்டும்.

களை நிர்வாகம்: விதைத்த 3 நாள்களுக்குள் ஏக்கருக்கு புளுகுளோரலின் 800 மி.லி தெளித்து களைகளை கட்டுப்படுத்தலாம். மருந்து தெளிக்காதபட்சத்தில் விதைத்த 20 மற்றும் 40ஆவது நாளில் களைக்கொத்து கொண்டு களை எடுOக்க வேண்டும்.

ஊடுபயிர்: ஆமணக்கை ஊடுபயிராகவும் பயிரிடலாம். ஆறு வரிசை நிலக்கடலை, உளுந்துக்கு ஒரு வரிசை ஆமணக்கு பயிரிடலாம்.

அறுவடை: பயிரின் வயதைக் கொண்டு அறுவடை செய்யலாம். குறுகிய கால ரகம் 120-140 நாள்களில் அறுவடை செய்யலாம். நடுத்தர கால ரகம் 150-160 நாள்களில் அறுவடை செய்யலாம்.

## முலாம் பழச் சாகுபடியில் கூடுதல் மகசூல்!



தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு ஏற்ற தட்பவெப்ப நிலை உள்ள பகுதிகளில் மா, வாழை போன்று முலாம் பழம் சாகுபடியிலும் நல்ல மகசூல் பெறலாம் என்று பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண்மை அறிவியல் இணையத்தின் வேளாண் அலுவலர்கள் கூறினர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்ய ஏற்ற தட்பவெப்ப நிலை உள்ளது. மா, வாழை போன்ற பயிர்களைப் போன்று நல்ல வருவாயைத் தரக்கூடிய முலாம் பழம் சாகுபடியில் விவசாயிகள் இப்போது அதிக ஆர்வம் செலுத்த தொடங்கியுள்ளனர். முலாம் பழம் சாகுபடியில் நவீனத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம் நோய், பூச்சித் தாக்குதல்களிலிருந்து பயிரைக் காப்பாற்றலாம்.

நல்ல வடிகால் வசதி கொண்ட மணல்பாங்கான பகுதி முலாம் பழம் சாகுபடிக்கு ஏற்றது. அமில, காரத் தன்மை 6.5 முதல் 7.5 என்றளவில் உள்ள மண்ணில் நல்ல வளர்ச்சி இருக்கும். மிதமான வெப்பநிலை (23 முதல் 27 சென்டிகிரேட்), மிதமான ஈரப்பதம் கொண்ட கால நிலை முலாம் பழம் சாகுபடிக்கு உகந்தது. மழை, பனி இல்லாத அனைத்துப் பருவத்திலும் முலாம் பழம் சாகுபடி செய்யலாம்.

விதைப்பு, பராமரிப்பு முறை: சாதாரணமாக நேரடியாக விதைப்பு செய்தும், துல்லிய பண்ணைய முறையில் குழித்தட்டு நாற்றாங்காலில் நாற்றுகளை உற்பத்தி செய்தும் நடவு செய்யலாம். விதைப்பிற்கு ரகத்தைப் பொருத்து ஏக்கருக்கு 200 கிராம் முதல் 1 கிலோ வரை விதைகள் தேவைப்படும். துல்லிய பண்ணைய முறையில் ஏக்கருக்கு 6 ஆயிரம் நாற்றுகள் வரை தேவைப்படும்.

விதைகளை கிலோவுக்கு 10 கிராம் என்றளவில் சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். நடவு இடைவெளி 1.5 மீட்டருக்கு 45 முதல் 65 செ.மீ. என்ற அளவில் பராமரிக்க வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம், 16:14:12 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துகளை இட வேண்டும். மேல் உரமாக விதைத்து 30ஆவது நாள் 16 கிலோ தழைச்சத்து இட வேண்டும்.

துல்லிய பண்ணைய முறையில் அடியுரமாக மணிச்சத்தை இட்டுவிட்டு, தழை, சாம்பல் சத்தை நீர்வழி உரப்பாசனமாக கரையும் உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

நடவு செய்த அல்லது விதைத்த 35ஆவது நாளில் நுண்ணூட்டக் கலவையை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். இதன்மூலம் வடிவற்ற காய்கள், காய்களில் வெடிப்பு போன்று போரான் சத்துக் குறைபாட்டால் உண்டாகும் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். மேலும், ஒரு வாரம் கழித்து பொட்டாசியம் சல்பேட் லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிப்பதால் பழங்களின் தரம் அதிகரிக்கும்.

இதுமட்டுமல்லாது நெகிழி நிலப் போர்வை (பாலீதின் மூடாக்கு) அமைப்பதன் மூலம் களையால் உண்டாகும் பாதிப்பு குறையும். மேலும், பாசன நீரின் தேவையும் குறையும். கூடுதல் நன்மையாக பழங்கள் நிலத்தில் படுவதால் உண்டாகும் அழுகல் நோய், நிறமாற்றம் ஆகியவை தவிர்க்கப்படுகின்றன. இந்தப் பயிர் குறுகிய காலப் பயிர். ஆதலால், நெகிழி நிலப் போர்வை இடுவதன் மூலம், ஒரு பயிர் முடிந்தவுடன் அதிலேயே 2 அல்லது 3 பயிர்களைச் சாகுபடி செய்ய இயலும்.

பயிர்ப் பாதுகாப்பு: இந்தப் பயிரில் பழ ஈ தாக்குதல் ஏப்ரல் முதல் மே மாதத்திற்கு பின் அதிகமாகக் காணப்படும். கோடைக் காலத்தில் குறைவாகவும், மழைக் காலத்தில் அதிகமாகவும் இருக்கும். காய்களின் மேலுள்ள தோலைக் கிழித்து தாய் ஈ முட்டையிடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள், காயின் சதைப் பற்றான பகுதியை உண்ணுவதால் அந்த இடத்திலிருந்து பழுப்பு நிறச் சாறு வடியும். புழுக்களால் தாக்கப்பட்ட பகுதி அழுகிவிடும். பாதிப்பு அதிகரிக்கும் போது காய்கள் உதிர்ந்துவிடும்.

இவ்வாறு தாக்கப்பட்ட காய்களைச் சேகரித்து மண்ணில் குழியெடுத்து அழிக்க வேண்டும். தாக்குதல் உள்ள போது கொடி, கொடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் நீர் பாய்ச்சி கூட்டுப் புழுவிலிருந்து வளர்ந்த ஈக்கள் வெளிவருவதைத் தடுக்க வேண்டும். கொடிகளுக்கு இடையே உள்ள பகுதியை நன்றாகக் கிளறி விடுவதன் மூலம் கூட்டுப் புழுக்களை கட்டுப்படுத்தலாம். ஒரு லிட்டர் தண்ணீரில் கார்பரில் 50 சதவீதம் நனையும் தூள் 2 கிராம் அல்லது பென்தோயேட் 2

மி.லி. அல்லது பென்தியான் 1.5 மி.லி. அல்லது கார்போசல்பான் 2 மி.லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

பூசணிக்காய் வண்டு: கொடியின் வேர்ப் பகுதியையும், தண்டுப் பகுதியையும் மண்ணிலுள்ள புழுக்கள் தின்று சேதத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், இலைகள், பூக்கள், காய்களையும் தின்று சேதப்படுத்தும். செடியைச் சுற்றியுள்ள பகுதியில் மண்ணைக் கிளறி, செடி ஒன்றுக்கு 50 கிராம் கார்பரில் 50 சதவீத நனையும் தூள் அல்லது 5 கிராம் பிப்ரோனில் குருணை அல்லது 5 கிராம் கார்போபியூரான் குருணை மருந்தை இட வேண்டும்.

அசுவணிப் பூச்சித் தாக்குதல்: இலையின் அடிப் பகுதியில் இளம் மற்றும் வளர்ந்த பூச்சிகள் சாற்றை உறிஞ்சும். இதனால், இலைகள் சுருங்கி மடிப்புகளுடன் காணப்படும். கொடி வளர்ச்சி குன்றி காணப்படும். பூச்சிகள் தேனை கழிவாக வெளியேற்றுவதால், தாக்கப்பட்ட செடியில் எறும்பின் நடமாட்டம் காணப்படும். ஒரு லிட்டர் தண்ணீரில் அசிபேட் 1 கிராம் அல்லது தயோகிளோபிரிட் 1 மி.லி. என்றளவில் தெளிப்பதன் மூலம் இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த பயிரில் சாம்பல் நோய், இலைப்புள்ளி நோய், இலைக் கருகல் நோய், பழ அழுகல் நோய், வாடல் நோய்த் தாக்குதலும் இருக்கும். மேற்கண்ட பூச்சித் தாக்குதல், நோய்த் தாக்குதலிலிருந்து பயிரைக் காத்து கூடுதல் வருவாய் பெறலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேளாண் அறிவியல் இணையம், பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம். மொபைல்: 99946 72204.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்
7.03.2013 A.M

## கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் பதிவு

குஜிலியம்பாறை: கறவை மாடுகளுக்கு, அரசு "ஆவின் நிறுவனம்' மூலம் இன்சூரன்ஸ் பதிவு செய்வதால், விவசாயிகள் மகிழ்சி அடைந்துள்ளனர்.குஜிலியம்பாறை ஒன்றியம் கருங்கல், லந்தகோட்டை, பாளையம் பகுதியில் கறவை மாடுகள் வளர்ப்பு அதிகரித்துள்ளது. சமீப காலமாக மாடுகள், நோய் தாக்குதல் காரணமாக இறப்பு ஏற்படுவதால், விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், திண்டுக்கல் "ஆவின் பால் நிறுவனம்' மூலம், மாடு ஒன்றுக்கு ரூ.526-ம், மாடு வளர்ப்போர் ரூ.526-ம் செலுத்தி இன்சூரன்ஸ் பதிவு செய்யும் நிகழ்சி நடந்தது. டாக்டர் அன்புராஜ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாநில துணை தலைவர் ராஜரத்தினம் பங்கேற்றனர்.

## பருவம் தவறி பெய்யும் மழையால் விவசாயிகளுக்கு... பலனில்லை நீர்நிலைகள் நிரம்பவும் வாய்ப்பில்லாத நிலை

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக நத்தத்தில் 28 மி.மீ., மழை பதிவானது. தற்போது பெய்யும் மழை விவசாயிகளுக்கும், குடிநீருக்கும் பலனில்லாததாகவே உள்ளது.மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைகள் அடுத்தடுத்து பொய்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. மழையை நம்பி விதைக்கப்பட்ட மானாவாரி பயிர்களில் பாதி கூட விளைச்சல் இன்றி கருகியது. கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் இறவை பாசன விவசாயமும் ஏமாற்றத்தை தந்தது.மழை தொடர்ந்து பொய்த்ததால் விவசாயிகள் பலர் வழக்கமான பரப்பில் செய்யும் விவசாயத்தை பெரிதளவில் குறைத்துக்கொண்டனர்.இந்நிலையில் தற்போது பெய்துள்ள மழை விவசாயிகளுக்கு முழுமையான பலன் தருவதாக இல்லை. காலம் தவறி மழை பெய்வது பயிர்களுக்கு ஏற்றதாக இல்லை என்றே விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.பருவத்தில் மழை பெய்திருந்ததால் நடவு செய்யப்பட்ட நாற்றுக்கள் தளைத்திருக்கும். இரண்டு நாட்களுக்கு முன்பு வெயில் கடுமையாக இருந்தநிலையில் தற்போது பெய்துள்ள மழை பூமி குளிரவைக்க மட்டுமே

முடியும். நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர ஏதுவாக இருக்காது, என்றும் தெரிவிக்கின்றனர். அதேசமயம், நேற்றைய மழையால், நத்தம், சாணார்பட்டியில், மாங்காய் மகசூல் அதிகரிக்கும் என விவசாயிகள் கூறினர்.பாதிப்பு: நேற்று பிளஸ் 2 பொதுதேர்வில், ஆங்கிலம் முதல்தாள் தேர்வு நடந்தது. வேடசந்தூர் அரசு பெண்கள் மேனிலைப்பள்ளியில் அப்பள்ளி மாணவர்கள் நீங்கலாக, காசிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, எரியோடு அரசு மேல்நிலைப்பள்ளி, மாரம்பாடி சிறுமலர் மேனிலைப்பள்ளி மாணவர்களும் தேர்வு எழுதினர்.வேடசந்தூரில் நேற்று காலை எட்டு மணிமுதல் 10.30 மணி வரை விடாத மழை பெய்தது. இதனால் தேர்வு எழுத வந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். நினைந்தவாறே மையத்திற்கு வந்தனர்.மழை விபரம் (மி.மீ):திண்டுக்கல்- 14.40, கொடைக்கானல்- 26.70, போட்கிளப்- 27.75, நத்தம்- 28, நிலக்கோட்டை- 9.20, பழநி- 5, வேடசந்தூர்-14.4, புகையிலை ஆராய்ச்சி நிலையம்- 12, சத்திரப்பட்டி- 19. மாவட்டத்தில் மொத்த மழை அளவு-168.77.—

## வறட்சியால் கொய்யா விளைச்சல் குறைவு விவசாயிகள் பாதிப்பு, சந்தை விலை உயர்வு

பழநி: தமிழகத்தில் எந்தாண்டும் இல்லாத கடும் வறட்சிக்காரணமாக, மானாவாரி பயிர்கள் கருகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக தண்ணீர் இல்லாமல் கொய்யா விளைச்சலும் குறைந்துள்ளது. பழநி, ஆயக்குடி சந்தையில் விலை அதிகரித்துள்ளது. பழநி அருகே ஆயக்குடியில் ஆண்டுதோறும் கொய்யா விளைச்சல் அமோகமாக இருக்கும், விற்பனையும் களைகட்டும். ஆனால் இவ்வாண்டு பருவமழை பொய்த்ததால், பழநி வட்டாரத்தில் வறட்சி நிலவுகிறது. நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. மானாவாரி பயர்கள் கருகி, கால்நடைகளுக்கு தீவனமும் கிடைக்கவில்லை.பாதிப்பு: பழநி, ஆயக்குடி கொய்யாய் தமிழகத்தில் தனி இடத்தை பெற்றுள்ளது. ஆயக்குடி சந்தையில், கேரளா மாநிலம், கோவை, நாமக்கல்,சேலம், தாராபுரத்தை சேர்ந்த மொத்த வியபாரிகள் கொய்யாவை வாங்கிச்செல்கின்றனர். இவ்வாண்டு விளைச்சல் பாதிப்பு அடைந்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால், 3 மாதத்திற்கு முன் கூடை(10 கிலோ) 150 ரூபாய்க்கு விற்பனையான கொய்யா, தற்போது 250 முதல் 300 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இவை வெளிச்சந்தையில் கிலோ ரூ.40 முதல் 60 வரை விற்கின்றனர்.பொன்னிமலைகரடு விவசாயி பெரியதுரை கூறுகையில்," மூன்று ஏக்கர் பரப்பளவில் கொய்யா சாகுபடி செய்கிறேன். கடந்தாண்டு 10 டன்னிற்கு மேலாக விளைச்சல் கிடைத்தது. இவ்வாண்டு வறட்சிக் காரணமாக தண்ணீர் இல்லை. 5 டன் கொய்யா தான் கிடைத்துள்ளது. பனாரஸ், லக்னோ

49,(சீனிக்கொய்யாய்) போன்றவை மட்டுமே விளைகிறது. கூடுதல் விலைக்கு விற்றாலும், விளைச்சல் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளோம்," என்றார்.

## பெரியகுளத்தில் அதிக மழை

தேனி: தேனியில் கடந்தாண்டு பருவ மழை ஏமாற்றியது. இதனால் நெல் சாகுபடி உள்ளிட்ட விவசாய பணிகள் பாதிக்கப்பட்டது. கடந்த வாரம் இரண்டு நாள் சாரல் மழை பெய்து ஏமாற்றியது. நேற்று முன் தினம் காலையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.சாரல் தூறியது. இரவு 8 மணிக்கு 10 நிமிடம் மழை பெய்தது. தொடர்ந்து சாரல் மழை பெய்தது.நேற்று, காலையில் வெயில் அடித்தது.நண்பகல் 2 முதல் 2.30 மணி வரை நல்ல மழை பெய்தது.அதன் பிறகு வழக்கம் போல் வெயில் அடித்தது. வனப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்தால், வனத்தில் தீப்பிடிக்கும் நிகழ்வு தடுக்கப்பட்டு, வனவளம் பாதுகாக்கப்படும். கால் நடைகளுக்கு தேவையான புற்கள் துளிர்விடத் துவங்கியுள்ளது. நீர் பிடிப்பு பகுதியில் இது போல், தொடர்ந்து மழை பெய்தால், அணைகளில் நீர் மட்டம் உயரும். கோடையில் குடிநீர் தட்டுப்பாடு தீரும். மாவட்டத்தில் மழையளவு மில்லி மீட்டரில்: ஆண்டிபட்டி - 4.8 மி.மீ., அரண்மனைபுதூர்-2, போடி - 0.6, கூடலூர் - 5, மஞ்சளாறு - 6, பெரியகுளம் - 7 ,பெரியாறு - 1.2, சோத்துப்பாறை - 2, தேக்கடி - 10, உத்தமபாளையம் - 5, வைகை அணை - 3, வீரபாண்டி - 3 ,மொத்தம் 49.60 மி.மீ., மழை பெய்துள்ளது. அணைகளின் நீர் மட்டும்: வைகை - 47.05 அடி (71), பெரியாறு - 112.40 (136), மஞ்சளாறு 31.60 (57), சோத்துப்பாறை - 65.60 (126.28), சண்முகாநதி 27.40 அடி (51).

## மிளகாய் வீரியத்தை குறைக்கும் சாரல் விவசாயிகள் கலக்கம்

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர், சோழந்தூர், சனவேலி, மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அக்டோபர் முதல் வாரத்தில் 2,200 ஏக்கரில் மிளகாய் விதைப்பு செய்யப்பட்டது. தற்போது மகசூலை எட்டியுள்ள செடிகளில் இருந்து மிளகாய் பழங்களை பறிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். வெயிலில் காயவைத்த பின்னரே சந்தையில் விற்பனைக்கு கொண்டுசெல்ல முடியும்.பல ஆயிரம் குவிண்டால் மிளகாய் களத்துமேடுகளில் உலரவைத்துள்ளனர். இந்நிலையில் இரண்டு நாட்களாக சாரல் மழை பெய்ததால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். ஆனந்தூர் விவசாயி சோமு, இப்றாகிம் கூறுகையில், ""செடியில் இருந்து பறித்த மிளகாய் பழங்களை ஆறு நாட்களாவது வெயிலில் உலர்த்தினால்தான் தரமான வத்தல் நிலையை அடையும். லேசான மழையில் நனைந்தால் கூட காம்புகள் உதிர்ந்து காரத்தில் வீரியம்

குறைந்து, அடிமாட்டு விலைக்கு தான் விற்க முடியும்," என்றனர்.இதனால் உலர் கொள்கலன் கிட்டங்கி அமைக்க, தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பருவம் தவறி பெய்யும் மழை விதைப்புக்கு குழம்பும் விவசாயிகள்

திருவாடானை: பருவநிலை மாறியதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். எந்த மாதத்தில் விதைத்து, எந்த மாதத்தில் அறுவடை செய்வது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. திருவாடானை தாலுகா நெற்களஞ்சியமாக திகழுவதால், விவசாயம் முக்கிய இடத்தில் உள்ளது. மன்னர்கள் காலத்தில் "ஆடிபட்டம் தேடிவிதை' என்ற பழமொழிக்கு ஏற்ப பணிகள் துவங்கி விவசாயம் செழித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினர். ஆண்டுகள் கடந்து பருவநிலை மாறவே, பழமொழி பொய்யாக துவங்கியது. ஆடி மாதத்தில் பெய்ய வேண்டிய மழை தாமதமாக பெய்ய துவங்கியதால் ஆவணியில் (ஜூலை, ஆகஸ்ட்) விதைக்க துவங்கினர். அதன் பின் ஏற்பட்ட பருவ மாற்றத்தால், புரட்டாசி மாதம்(செப்டம்பர், அக்டோபர்) விதைக்க துவங்கினர். கடந்தாண்டு ஏற்பட்ட, பருவநிலை மாற்றத்தால் அதிர்ச்சியடைந்தனர். ஆகஸ்டில் வழக்கமாக விதைப்பு பணியை துவக்கிய விவசாயிகள், அறுவடைக்கு, மழைக்காக காத்திருந்தனர். போதிய மழையின்றி, புஞ்சை நிலங்கள் பாதிக்கபட்டன. மழைக்கான வாய்ப்பே இல்லாத மாதமான மாசியில் (மார்ச்) சில நாட்களாக மழைகாலம் போல், கனமழை பெய்து வருகிறது.இது குறித்து திருவாடானை விவசாயி ராசு கூறியதாவது: பருவநிலை மாற்றத்தால் விவசாயிகள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. வரும் ஆண்டில் எந்த மாதத்தில் விதைப்பது, எந்த மாதத்தில் அறுவடையாகும் என்பதே தெரியவில்லை, என்றனர்.

### கொட்டுது மழை குறையுது விலை

மண்டபம்: ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட பகுதியில் தற்போது தடைசெய்யப்பட்ட இரட்டைமடி வலையில் மீன்பிடி தொழில் நடக்கிறது. இதில் பிடிக்கப்படும் ஏராளமான பேசாளை மீன்கள் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது. கிலோ 8 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்ட, இந்த மீன், தற்போது பெய்து வரும் கனமழையால், 3 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## குறைந்த பரப்பில் சாகுபடியாகி அறுவடை... வெளிமாநில மஞ்சள் வரத்தால் விலை சரிவு

ஈரோடு: ஈரோடு மாவட்ட பகுதியில் மஞ்சள் அறுவடையை விவசாயிகள் துவக்கியுள்ளனர். கடந்தாண்டு போதிய மழையின்றி மஞ்சள் உற்பத்தியில், 40 சதவீதம் நடப்பாண்டு குறைந்து போனதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் மஞ்சள் உற்பத்தியில், ஈரோடு மாவட்டம் தனி இடத்தை பெற்றுள்ளது. மாநில அளவில் முதலிடத்திலும், கர்நாடகா, ஆந்திரா மாநிலத்தில் உற்பத்தியான மஞ்சளுக்கு, ஈரோடு சந்தையில் நல்ல விலை கிடைப்பதால், இன்றும் ஈரோடு முக்கிய விற்பனை களமாக உள்ளது. இம்மாவட்டத்தில் நெல்லுக்கு அடுத்தபடியாக, மஞ்சளை விவசாயிகள் அதிகம் பயிரிட்டு வருகின்றனர். கடந்த, 2010ல் மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய் வரையில் விலை போனதால், அதிகப்படியான விவசாயிகள் மஞ்சளை பயிரிட்டனர்.

தடாலடியாக அடுத்தடுத்த மாதங்களில் விலை குறைந்து, குவிண்டால் இரண்டாயிம் ரூபாய்க்கு வாங்க ஆள் இல்லாத நிலையும் ஏற்பட்டது. மஞ்சள் விவசாயிகளின் தொடர் போரட்டத்துக்குப்பின், அரசு 5,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதாக அறிவித்ததுடன், மஞ்சள் மண்டிகளில் 7,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

நடப்பு பருவத்தில் கிணறு, ஆழ்குழாய் பாசனத்தை நம்பிய விவசாயிகள் குறைந்த அளவில், 30 ஆயிரம் ஏக்கரில் மஞ்சளை பயிரிட்டனர். தற்போது மாவட்டத்தில் மஞ்சள் அறுவடை துவங்கியுள்ளது.

இதுபற்றி சாவடிபாளையம் விவசாயி பழனிச்சாமி கூறியதாவது:

கடந்த ஓராண்டாக போதிய மழையில்லாததால், மஞ்சள் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்தனர். உற்பத்தி குறைந்ததால், மஞ்சள் விலை உயரும் என, முன்கூட்டியே வைகாசியில் மஞ்சள் பயிரிட்டோம்.

வாய்க்காலில் தண்ணீர் வராத காலத்தில், கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் விட்டோம். கடந்தாண்டு ஏக்கருக்கு, 260 கொப்பறை (ஆறு கொப்பறை - 1 குவிண்டால்) முதல், 300 கொப்பறை வரையில் மஞ்சள் உற்பத்தியானது.

நடப்பாண்டு போதிய மழை இல்லாததால், ஏக்கருக்கு, 120 கொப்பறை முதல், 150 கொப்பறை மஞ்சள் உற்பத்தியானது. வெட்டுக்கூலி, வேகவைத்தல், வண்டி வாடகை என செலவிட்டு, சந்தைக்கு கொண்டு சென்றால், புதிய மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக, 3,500 ரூபாய்க்கு கேட்கின்றனர்.

வடகிழக்கு மாநிலங்களில் உற்பத்தியான மஞ்சளை ஒட்டுமொத்தமாக, தமிழகத்துக்கு இறக்குமதி செய்து, வேகவைத்து சாயமேற்றி, விற்னைக்கு கொண்டு வருகின்றனர். எனவே, விலை உயர வாய்ப்புகள் இல்லாததால், நடப்பாண்டு மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளுக்கு நஷ்டமே கிடைக்கும், என்றார்.

மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது:

பொதுவாக மஞ்சள் ஸ்டாக் வைத்து விற்பனை செய்யலாம். புதிய மஞ்சள் வரத்தாவதால், ஸ்டாக் வைக்கப்பட்ட மஞ்சளும் அதிகமாக விற்பனைக்கு வெளிவரும். தரமாக உள்ள மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும். இருப்பினும், சாகுபடி பரப்பு குறைவாக உள்ளதால், வைத்திருந்து விற்பனை செய்தால், 7,000 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கும்.

வெளிமாநில மஞ்சள் வரத்தாவதால், அறுவடையாகும் மஞ்சளை எந்த வகையிலும் பாதிக்காது, என்றனர்.

## பரவலான மழையால் மக்களுக்கு மகிழ்ச்சி

ஊட்டி:நீண்ட இடைவெளிக்கு பின், நீலகிரியின் பல இடங்களில் நேற்று முன்தினம், மிகப்பரவலாக மழை பெய்தது. காலநிலை மாற்றத்தால், கடுங்குளிர், மேக மூட்டம் காணப்பட்டது. நீலகிரியில், வாட்டியெடுத்த வெயில், ஆங்காங்கே தலை தூக்கிய வறட்சியால் தண்ணீருக்கு தாளம் போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது; விவசாய நிலங்கள் வறண்டன. வானம் பார்த்து காத்திருந்த, மலை மாவட்ட மக்களுக்கு, "காற்றழுத்த தாழ்வு நிலையால் மழை பெய்யும்', என்ற சென்னை வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதற்கேற்ப, நேற்று முன்தினம் இரவு துவங்கி, மாவட்டத்தின் பல இடங்களில் மிகப் பரவலாக மழை பெய்தது. நீராதாரங்கள் நிரம்ப, விவசாய நிலங்கள் செழிக்க இந்த மழை போதாது என்றாலும், நிலத்தை நனைத்த மழைநீரால் மாவட்ட மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திடீர் காலநிலை மாற்றத்தால், ஊட்டியில் பகல் நேரங்களில் கடுங்குளிர் நிலவியது. குன்னூரில் மேக மூட்டமும், லேசான சாரல் மழையும் தொடர்ந்து இருந்தது.

நேற்று முன்தின மழையளவு விபரம்

குன்னூர் - 19.60 மி.மீ.,

குந்தா பாலம் - 11.00

கேத்தி - 11.00

கோத்தகிரி - 14

ஊட்டி - 13.40

அப்பர் பவானி- 1.00

எமரால்டு - 2.00

அவலாஞ்சி - 4.00

## தொடர் சாரல் மழை நிலத்தடி நீர் உயர்வு

திருச்சி: தமிழகத்தில் வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால், கடலோர மற்றும் மத்திய மாவட்டங்களில் மழை பெய்யும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. அதேபோல, திருச்சி மாவட்டத்தில் கடந்த, இரண்டு நாட்களாக ஓரளவு சாரல் மழை பெய்தது.

நேற்று பெய்த மழை அளவு வருமாறு:

லால்குடி, 3 மி.மீ., மணப்பாறை, 6.20, புள்ளம்பாடி, 7.40, திருச்சி முக்கொம்பு மேலணை, 9.30, திருச்சி டவுன் 4.20, மருங்காபுரி, 35.20, பொன்னனியாறு அணை, 14, நவலூர் குட்டப்பட்டு, 4, நந்தியாறு தலைப்பு 18, கல்லக்குடி, 2.10, கோவில்பட்டி, 13.20, பொன்மலை, 4, திருச்சி ஜங்ஷன், 4.80, துவாக்குடி ஐ.டி.ஐ., 7 மி.மீ., என, மாவட்டம் முழுவதும், 132.40 மி.மீ., மழையளவு பதிவாகி உள்ளது. சராசரியாக, 5.76 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது.

மாவட்டத்தில் பிற இடங்களை காட்டிலும், மருங்காபுரி பகுதியில், 35.20 மி.மீ., மழை பெய்துள்ளது. மருங்காபுரியில் மலை, குன்றுகள் அடங்கிய வனப்பகுதி உள்ளது. வறண்டு கிடந்த வனப்பகுதிக்கு, இந்த மழை ஓரளவு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், இன்னும் சில நாட்களுக்கு, வன விலங்குகளுக்கு தீவனம், குடிநீர் பிரச்னை வராமல் இருக்கும். வன விலங்குகள் மலையை விட்டு கீழே இறங்கி, விவசாய நிலங்களில் பயிர்களை நாசம் செய்யாமல் இருக்கும்.

கடந்த சில நாட்களாக பனியும், வெயிலும் மாறிமாறி வெளுத்து வாங்கியதால், மக்கள் கடும் அவதியடைந்தனர். பலரும் தேக வறட்சியால் வாடி வதங்கினர். கடந்த இரண்டு நாட்களாக குளிர்ந்த காற்றுடன் மழை பெய்துவருவதால், காற்றில் ஈரப்பதம் அதிகரித்து, குளுமையானது. இதனால், வெயில், பனியால் அவதியடைந்த மக்கள் நிம்மதியடைந்துள்ளனர். சாரல் மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக, பொதுப்பணித்துறையினர் தெரிவிக்கின்றனர்.

### விவசாயிக்கு நிவாரணம் எம்.எல்.ஏ., வழங்கல்

ஆலங்குடி: வறட்சியால் பாதிக்கப்பட்ட, 18 விவசாயிகளுக்கு நிவாரண நிதியை, எம்.எல்.ஏ., கு.ப.கிருஷ்ணன் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே நெடுவாசலில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது. நெடுவாசலில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், பதிவு பெற்ற, 18 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி, இரண்டு லட்சத்து, 21 ஆயிரம் ரூபாய் வழங்கி, ஆலங்குடி தொகுதி எம்.எல்.ஏ., கு.ப.கிருஷ்ணன் வழங்கி பேசியதாவது:

இந்த வறட்சி நிவாரண நிதியை, பயனாளிகள் முழுவதும் பயன்படுத்தி கொள்ளலாம். இந்த தொகையை எவ்வித வேளாண்மை கடன்களில் வரவு வைக்க கூடாது. தமிழக முதல்வர் பிறந்த நாளில், இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் தான், இந்த திட்டம் உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கூட்டுறவு அறந்தாங்கி சரக இணை பதிவாளர் சதீஷ்குமார், எஸ்.ஓ.குணசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் பங்கேற்றனர்.

### அறுவடை பாதிப்பால் புதுகை விவசாயிகள் கவலை : தொடர்மழையால் பள்ளிகளுக்கு விடுமுறை

புதுக்கோட்டை: இரண்டாவது நாளாக நேற்றும், புதுக்கோட்டையில் பலத்த மழை பெய்தது. கன மழையால் மாவட்டத்தில் நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அறுவடை பாதிக்கப்படும் என்பதால், மாவட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, கடலோர மாவட்டங்களில், இரண்டு நாட்களாக கன மழை பெய்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில், இரண்டாவது நாளாக நேற்றும் பலத்த மழை பெய்தது. நேற்று முன்தினம் இரவு துவங்கிய மழை, நேற்றுக் காலை, பத்து மணி வரை, இடைவிடாது கொட்டி தீர்த்தது. காலை, 10 மணியிலிருந்து, மதியம், ஒரு மணி வரை, மழை சற்று ஓய்ந்த நிலையில், ஒரு மணியிலிருந்து மீண்டும் மழை பெய்யத் துவங்கியது. இரண்டு நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால், அம்மாவட்டத்தில் கடந்த ஒருமாதமாக நிலவிவந்த வெயிலின் தாக்கம் தணிந்து, குளிர்ச்சியான சூழ்நிலை நிலவுகிறது.

நேற்றுமுன்தினம் காலை, 8 மணி முதல், நேற்று காலை, 8 மணி வரையிலான, 24 மணி நேரத்தில் மாவட்டம் முழுவதும், 1,126 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கட்டுமாவடி கடலோரக் கிராமத்தில், 98 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் பெய்துள்ள

மழையளவு மி.மீ., அளவில் கீழ்வருமாறு:

புதுக்கோட்டை-78, பெருங்களூர்-26, ஆதனக்கோட்டை-33, இலுப்பூர்-19.4, அன்னவாசல்-21, குடுமியான்மலை-57.6, விராலிமலை-10.2, கீரனூர்-31, உடையாலிப்பட்டி-3.5, திருமயம்-50.2, அரிமளம்-78, கீழாநிலைக்கோட்டை-40, காரையூர்-77.2, பொன்னமராவதி-20, ஆலங்குடி-51, கறம்பக்குடி-10, அறந்தாங்கி-87, ஆயிங்குடி-66.4, நாகுடி-75, மணமேல்குடி-65, ஆவுடையார்கோவில்-40, மீமிசல்-50 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 45 மி.மீ., மழை பெய்துள்ளது.

புதுக்கோட்டையில் பெய்த பலத்த மழையினால், நகரின் பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. ராஜகோபாலபுரம், பூங்காநகர், கம்பன்நகர், மாணிக்கம்நகர், நிஜாம்காலனி, பெரியார்நகர் உள்ளிட்ட பகுதிகளில், வீடுகளை சுற்றி மழை தண்ணீர் தேங்கி நிற்கிறது. மாவட்ட விளையாட்டு மைதானம் குளம்போல் காட்சியளிக்கிறது. புதிய பஸ்ஸ்டாண்ட், தெற்கு, 4ம் வீதி, கலீப்நகர் உள்ளிட்ட பகுதிகளில், வடிகால்கள் தூர்வாரப்படாமல் நிரம்பியுள்ளதால், அதுவழி செல்லவேண்டிய கழிவுநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது.

புதிய பஸ்ஸ்டாண்ட் மற்றும் பஞ்சாயத்து யூனியன் ரோட்டில் பெருக்கெடுத்து ஓடிய கழிவுநீர், ஆயுதப்படை மைதானத்துக்குள் புகுந்து குளம்போல் தேங்கியுள்ளது. இதனால் அப்பகுதிகளில் துர்நாற்றத்துடன் சுகாதார சீர்கேடு நிலவிவருகிறது.

அடைமழை காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. ப்ளஸ் 2 பொதுத்தேர்வு நடைபெறும் பள்ளிகளைத் தவிர, இதர பள்ளிகள் இயங்கவில்லை. ப்ளஸ் 2 தேர்வு எழுத சென்ற மாணவர்கள் பலர் மழையில் நனைந்தவாறு சென்றனர்.

அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம், கறம்பக்குடி உள்ளிட்ட பகுதிகளில், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மழை மேலும் நீடித்தால் நிலத்தில் சாய்ந்துள்ள நெல் மணிகள் முளைவிடும் சூழ்நிலை உருவாகும் என்பதால், மழை பெய்தும் கெடுக்கும், பெய்யாமலும் கெடுக்கும் என்பதற்கு தற்போது பெய்துவரும் மழை எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

## மார்க்கெட் கமிட்டிகளில் மழையால் பாதிப்பு; ஆயிரக்கணக்கான நெல், பருத்தி மூட்டைகள் சேதம்

விழுப்புரம்:விழுப்புரம், திருக்கோவிலூர், செஞ்சி மார்க்கெட் கமிட்டிகளில், குடோன் வசதியின்மையால் நேற்று பெய்த மழையில் நெல், பஞ்சு மூட்டைகள் சேதமடைந்தன.விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில், இதர தானிய வகைகளுடன் நெல், பருத்தி வரத்து தற்போது அதிகரித்துள்ளது. விவசாயிகள் நெல் மூட்டைகளையும், பருத்தி மூட்டைகளையும் கொண்டு வந்து நேற்று குவித்திருந்தனர்.இட பற்றாக்குறையால், திறந்த வெளி களங்களில் மூட்டைகளை வைத்துவிட்டு, விவசாயிகள் காத்திருந்தனர். நேற்று காலை 9 மணிக்கு துவங்கி ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. இதனால் நெல், பருத்தி மூட்டைகள் நனைந்து சேதமானது. வியாபாரிகள் ஏலம் எடுக்க தயங்கினர். இதனால் மதியம் 2 மணி வரை காத்திருந்த விவசாயிகள் திடீர் சாலை மறியல் செய்தனர்.குடோன்களை விவசாயிகள் ஆக்கிரமித்துள்ளதை கண்டித்தும், மழையில் தானியங்களை வீணடித்துள்ளதை கண்டித்தும், கொள்முதல் செய்யாததை கண்டித்தும் கோஷமிட்டனர்.இதனையடுத்து விக்கிரவாண்டி எம்.எல்.ஏ., ராமமூர்த்தி, விழுப்புரம் தாசில்தார் ரவிக்கண்ணன், கமிட்டி அதிகாரிகள் ஆகியோர் வியாபாரிகள் மற்றும் விவசாயிகளிடையே பேச்சுவார்த்தை நடத்தினர்.இது குறித்து மார்க்கெட் கமிட்டி கண்காணிப்பாளர் கிருஷ்ணதாஸ் கூறும்போது, விழுப்புரம் கமிட்டிக்கு நேற்று 4,000 மூட்டைகள் நெல்லும், 700 குவிண்டால் வரை பருத்தி வரத்தும் இருந்தது. இடமில்லாததால், 600 மூட்டைகள் வரை வெளியே களத்தில் வைத்திருந்த நெல், பருத்தி நனைந்துவிட்டது.அனைத்து நெல், பருத்தி மூட்டைகளும் ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

மழையில் நனைந்த நெல் மூட்டைகளுக்கு சற்று குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் கமிட்டிக்கு நேற்று 10 ஆயிரம் நெல் மூட்டைகள் ஏலத்திற்கு வந்தது. இவை முழுவதும் திறந்தவெளி மைதானத்தில் வைத்திருந்தனர். காலை 7 மணிக்கு துவங்கி பகல் 12.30 மணி வரை மழை கொட்டி தீர்த்ததால், தண்ணீர் குளம் போல் தேங்கி நெல் மூட்டைகள் அனைத்தும் நனைந்து சேதமானது.குடோன் முழுவதும் வியாபாரிகள் கொள்முதல் செய்திருந்த மூட்டைகள் ஆக்கிரமித்திருந்ததால், விவசாயிகளின் மூட்டைகள் சேதமானது.கமிட்டி கண்காணிப்பாளர் செந்தில்முருகன் வியாபாரிகளுடன் பேசி, நனைந்த நெல் மூட்டைகளையும் ஏலத்தில் எடுக்குமாறு வலியுறுத்தினார். மழை பெய்ததால் ஏலம்

தடைபட்டது.இதனால் சாலை மறியல் செய்த விவசாயிகள், மழை பாதிப்பால் மூட்டைக்கு 250 ரூபாய் வரை விலை குறைப்பு ஏற்படுமென்பதால் நஷ்ட ஈடு வழங்க வேண்டும், இன்றே நெல் ஏலத்தில் எடுக்க வேண்டுமென வலியுறுத்தினர்.நெல் மூட்டைகள் குவிந்துள்ளதால், இரண்டு நாட்கள் (8ம் தேதி வரை) கமிட்டி இயங்காது. தொடர்ந்து சனி, ஞாயிறு விடுமுறைக்கு பின் 11ம் தேதி முதல் வழக்கம்போல் நெல் ஏலம் நடக்குமென கமிட்டி நிர்வாகத்தினர் அறிவித்தனர்.செஞ்சி: செஞ்சி பகுதியில் நேற்று பெய்த மழையால் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திறந்த வெளி களத்தில் இருந்த, 5,000க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் நனைந்தன. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

## உளுந்தூர்பேட்டையில் 5,000 நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை கமிட்டியில் நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன.உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் சாக்கு பற்றாக்குறையால் நெல் மூட்டைகள் எடை போடுவது கடந்த 5ம் தேதி நிறுத்தப்பட்டது. இப்பிரச்னையால் நெல் கொள்முதல் செய்வதை வியாபாரிகள் நிறுத்தி வைத்தனர். மறுநாள் 5ம் தேதி நெல் கொள்முதல் செய்யப்படாததால், விவசாயிகள் கமிட்டியிலேயே தங்கி, மூட்டைகளுக்கு காவல் இருந்தனர்.ஆனால் நேற்று, வியாபாரிகளும், எடையாளர்களும் நேற்று முன்தினம் வந்த மூட்டைகளில் 240 விவசாயிகளுக்கு லாட் மட் டுமே வழங்கினர்.

மற்ற நெல் மூட்டைகளுக்கும், நேற்று கொண்டு வந்த மூட்டைகளுக்கும் லாட் வழங்கப்படவில்லை.இதனால் அதிருப்தியடைந்த விவசாயிகள் மார்க் கெட் கமிட்டி கண்காணிப்பாளர் சிவநேசனிடம் முறையிட்டனர். இருந்தும் பிரச்னை தீரவில்லை.
நேற்று மதியம் 2.30 மணியளவில் திடீரென மழை பெய்ததால் மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் விவசாயிகள் வைத்திருந்த 5,000க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் நனைந்தது.இன்றும், நாளையும் நெல் கொள்முதல் செய்யப் படாது என கமிட்டி நிர்வாகத்தினர் மாலை 4.30 மணியளவில் மைக் மூலம் அறிவிப்பு செய்தனர்.
இதனால் வேதனை அடைந்த விவசாயிகள் பல ரும் வேறு வழியின்றி நெல் மூட்டைகளை வீட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

## பயிர்களை அழித்து நாசம் சேலம் அருகே யானைகள் அட்டகாசம்

சேலம்: சேலம், வலசையூர் அருகே, விவசாய நிலத்துக்குள் புகுந்த யானைகள் கூட்டம், அங்குள்ள பயிர்களை நாசம் செய்தது. காட்டுக்குள் விரட்டுவதற்கான நடவடிக்கைகளில், வனத்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை உள்ளிட்ட வனப்பகுதிகளில், யானைகள் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. தற்போது, கடும் வறட்சி நிலவுவதால், தண்ணீர் தேடியும், உணவு தேடியும், யானைகள் கூட்டம், நகருக்குள் படையெடுக்கிறது.

கடந்த ஆண்டு, சேலம் வனப்பகுதிகளில், யானைகள் சுற்றித்திரிந்தன. வீடுகள், கடைகள், விவசாய நிலங்களை நாசம் செய்தன. கருமந்துறையில், குட்டி யானை ஒன்று இறந்தது. அதை தேடி, யானைகள் கூட்டம் சுற்றி வந்ததாக கூறப்பட்டது.

இந்நிலையில், ஆத்தூர், தலைவாசல், வாழப்பாடி பகுதிகளில், ஒரு குட்டி யானை, ஐந்து பெரிய யானைகள், அங்குள்ள மலைப்பகுதிகளில் சுற்றித்திரிந்தது. அப்பகுதி மக்கள், பட்டாசு வெடித்தும், தீப்பந்தம் காட்டியும், யானைகளை விரட்டினர். அவ்வாறு இருந்தும், நெல், சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்களை நாசம் செய்து, அங்கிருந்து வெளியேறியது.

நேற்று, வாழப்பாடி பள்ளத்தானூரில் இருந்து, அயோத்தியாபட்டணம் பகுதிக்குள் நுழைந்தது. மாலை, வலசையூரை அடுத்த பருத்திக்காடு, காரைக்காடு பகுதியில் முகாமிட்ட யானைகள், அங்கு திரண்டிருந்த மக்களை விரட்டியது.

பொதுமக்கள், ஊருக்கு வெளியில் தீயை எரித்து, யானைகள் உள்ளே நுழையாதவாறு தடுத்தனர். வனத்துறை அதிகாரிகள், பட்டாசு வெடித்து, யானைகளை விரட்டினர். அங்கும், இங்குமாக சுற்றித்திரிந்த யானைகள், இரவில், அரூர் காட்டுப்பகுதிக்குள் சென்றது.

சேலம் மாவட்டத்துக்குள், யானைகள் நுழைந்து அட்டகாசம் செய்வது தொடர்ந்து கொண்டிருக்கிறது. வனத்துறை அதிகாரிகள், யானைகள் ஊருக்குள் நுழையாதவாறு வேலி அமைக்க வேண்டும். இந்த நிலை தொடர்ந்தால், எங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு இல்லை என, பருத்திக்காடு பகுதி மக்கள் கூறினர்.

## தக்காளி விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் பெரும் கலக்கம்

தர்மபுரி: தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னகாரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர் உள்பட மாவட்டம் முழுவதும், தக்காளி, 20 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் ஆகிய பகுதிகளில் உற்பத்தியாகும் தக்காளிகளை விவசாயிகள் பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டிலும், தர்மபுரி, நல்லம்பள்ளில தொப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் விளையும் தக்காளிகளை தர்மபுரி தினசரி சந்தை, உழவர் சந்தைகளில் விற்பனை செய்து வருகின்றனர். சென்னை, கோவை, திண்டுக்கல், வத்தலகுண்டு, மதுரை மற்றும் நெல்லை, கேரளா ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பாலக்கோடு சந்தையில் இருந்து, தக்காளியை வாங்கி செல்கின்றனர். கடந்த, சில தினங்களாக தர்மபுரி மாவட்டம் உட்பட மாநிலம் முழுவதும் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளது.
அப்பகுதிகளுக்கு, பாலக்கோடு தக்காளி சந்தையில் இருந்து, தக்காளி விற்பனைக்கு அனுப்புவது பெருமளவு குறைந்துள்ளது. இதனால், பாலக்கோடு மார்க்கெட்டில், கடந்த சில தினங்களாக, தக்காளி விலை கடும் சரிவை கண்டு வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.தக்காளி விவசாயி ராமன் கூறியது: பாலக்கோடு மார்கெட்டுக்கு, 10 நாட்களுக்கு முன், நாள் ஒன்றுக்கு, 4,000 தக்காளி கூடைகள் விற்பனைக்கு வந்தது. அப்போது, 18 கிலோ எடை கொண்ட தக்காளி கூடை, 50 முதல், 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.
தற்போது, விளைச்சல் அதிகரித்ததை தொடர்ந்து, 6,000 கூடைகள் விற்பனைக்கு வருகிறது.
அதனால், ஒரு கூடை தக்காளி, 25 முதல், 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
தக்காளி பறிக்கும் கூலி மற்றும் சந்தைக்கு கொண்டு வரும் வாகன செலவுக்கு கூட, தக்காளிக்கு விலை கிடைக்காததால், பெரும்பாலான விசாயிகள், தக்காளி பறிப்பதை தவிர்த்து வருகின்றனர்.
இவ்வாறு அவர் கூறினார்.

## 17 லட்சம் "தானே' முந்திரி கன்றுகள் தேக்கம் : வறட்சியால் விவசாயிகள் வாங்க தயக்கம்




கடலூர் மாவட்டத்தில் போதிய மழையின்றி கடும் வறட்சி நிலவுவதால், "தானே' முந்திரி கன்றுகளை வாங்க விவசாயிகள் தயக்கம் காட்டுவதால், 17 லட்சத்து 55 கன்றுகள் உற்பத்தி

செய்த வேளாண் அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன."தானே' மறுவாழ்வு திட்டத்தில், புயலால் பாதித்த கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்க விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையம், வனத் தோட்டக்கழகம், தோட்டக்கலைத் துறை, நெய்வேலி தோட்டக்கலைத் துறை மற்றும் அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சரிகள் மூலம் 25 லட்சம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி மே மாதம் துவங்கியது.உற்பத்தி செய்த கன்றுகள் அனைத்தும் மழைக்காலம் துவங்கியதும் விவாசாயிகள் நட்டு பராமரிக்க ஏதுவாக செப்டம்பர் மாதத்திற்குள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால், நடப்பாண்டு போதிய மழை பெய்யாததால் மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவி வருகிறது. மேலும், அரசு அறிவித்த போர்வெல் திட்டங்கள் கிடப்பில் உள்ளதால், முந்திரி கன்றுகளை வாங்கி, ஈரப்பதமின்றி உள்ள வயல்களில் நடவு செய்து பராமரிக்க சிரமம் என்பதால், விவசாயிகள் கன்றுகளை பெறுவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனால், மாவட்டத்தில் இதுவரை விவசாயிகளுக்கு 7 லட்சத்து 45 ஆயிரம் முந்திரி கன்றுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 17 லட்சத்து 55 ஆயிரம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்த வேளாண்துறை தோட்டங்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.ஒரே இடத்தில் நீண்ட நாட்களுக்கு கன்றுகளை வைத்திருந்தால் வேரூன்றி விடும். இதனால் முந்திரி கன்றுகள் வளரும் பைகளை இடம் மாற்ற வேண்டும்.

இதுபோன்று அடிக்கடி இடம் மாற்றுவதால் சேதமடைந்த ஏராளமான ஒட்டு கன்றுகள் பிரித்து வைக்கப்பட்டுள்ளன.
இதனால் நிவாரணப் பணிகளுக்கு வழங்கும் கன்றுகள் எண்ணிக்கை குறைவதால், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், பணியாளர்கள் உதவியுடன் சேதமடைந்த கன்றுகளின் மேல் பகுதியை வெட்டி எடுத்து, தாய் மரத்திலிருந்து குச்சிகளை எடுத்து மீண்டும் ஒட்டு கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.தோட்டக்கலைப் பணியாளர்கள் கன்றுகள் உற்பத்தி செய்து, ஐந்து மாதங்களுக்கு மேலாக முந்திரி கன்றுகளைப் பராமரிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். தமிழக அரசு "தானே'வில் பாதித்த விவசாயிகளுக்கு, போர்வெல் அமைத்து தரும் பணிகளை தீவிரப்படுத்தி, முந்திரி கன்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வெங்காயம் பயிரிட்ட விவசாயிகள் கவலை




திருப்பூர்:குறைந்தழுத்த மின்சாரம் சப்ளையாவதால், மின் மோட்டார் இயக்க முடியாமல், முத்தணம்பாளையம் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், வெங்காயம் சாகுபடி எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என கவலைப்படுகின்றனர்.திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட முத்தணம்பாளையம் பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. மக்காச்சோளம், சோளத்தட்டு, வாழை மற்றும் வெங்காயம் பயிரிடப்படுகின்றன. பெரும்பாலான தோட்டங்களில் வெங்காய நாற்றுக்கள் பயிரிடப்பட்டுள்ளன. 80 நாட்களுக்கு முன், ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட வெங்காய நாற்றுகள், தற்போது அறுவடைக்கு தயாராகி உள்ளன. கடந்த ஒரு வாரமாக, முத்தணம்பாளையம் பகுதியில் குறைந்த மின்னழுத்தம் காரணமாக, மின் மோட்டார் இயக்கி, பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். அதனால், அறுவடை பாதிக்கப்படுமோ என்ற அச்சத்திலும் உள்ளனர்.விவசாயி ஒருவர் கூறுகையில், "ஒரு ஏக்கரில் வெங்காயம் பயிரிட, 70 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டுள்ளோம். வழக்கமாக 3,000 கிலோ வரை சாகுபடி கிடைக்கும். தற்போது ஒரு கிலோ வெங்காயம் 20 முதல் 25 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அறுவடைக்கு இன்னும் ஒரு வாரம் உள்ளது. ஆனால், குறைந்தழுத்த மின்சாரம் சப்ளையாவதால், மின் மோட்டார் இயக்க முடிவதில்லை. பயிர்களுக்கு போதுமான அளவு தண்ணீர் பாய்ச்ச முடியாததால், எதிர்பார்க்கும் சாகுபடி கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது,' என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

7.03.2013 A.M

## 50 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி அமைச்சரவை இன்று முடிவு



புதுடெல்லி : 50 லட்சம் டன் கோதுமை அதிகமாக ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவது பற்றி, மத்திய அமைச்சரவை குழு இன்று விவாதிக்கிறது. இது வரை இல்லாத அளவுக்கு, 2011,12ம் ஆண்டில் மிக அதிகபட்சமாக 9 கோடி 48 லட்சம் டன் கோதுமை உற்பத்தியானது. இது, நடப்பாண்டில்(2012,13) 9 கோடி 23 லட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், நாட்டின் பொது விநியோகத் திட்டத்துக்கு 1.12 கோடி டன் கோதுமை தேவை. ஆனால், மத்திய அரசு கிடங்குகளில் 3 கோடி டன் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 45 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியது. இந்நிலையில், மேலும் 50 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பது பற்றி, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு இன்று விவாதிக்கவுள்ளது.

## சர்க்கரை மீதான கட்டுப்பாட்டை விரைவில் தளர்த்த பிரதமர் முடிவு



## மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை டெல்டாவில் 2வது நாளாக கனமழை




தஞ்சை: டெல்டா மாவட்டங்களில் 2வது நாளாக நேற்றும் பரவலாக பலத்த மழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.குமரி கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.தஞ்சை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் விட்டுவிட்டு மழை பெய்தது. நேற்று காலை முதல் மதியம் வரை தொடர்ந்து மழை பெய்தது. தாழ்வான பகுதிகளிலும் குளம், குட்டைகளிலும் மழை நீர் தேங்கியது. மழையால் மாணவ, மாணவிகள் சிரமத்துடன் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்றனர்.தஞ்சை மாவட்ட கடலோர பகுதிகளில் விடிய விடிய கனமழை பெய்தது. அதிராம்பட்டினம் உப்பளங்களில் மழை வெள்ளம் புகுந்ததால் உற்பத்தி பாதிக்கப்பட்டது.அதிராம்பட்டினம், ஏரிபுறக்கரை, கீழத்தோட்டம், மறவாக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பைபர் படகு மீனவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கனமழையால் நேற்று முன்தினம் இரவு கடலுக்கு செல்லவில்லை.மழையால் தஞ்சை மாவட்டத்தில் பின்பட்ட சம்பா, தாளடி அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் பணி பாதிக்கப்பட்டுள்ளது. மழை தொடர்ந்தால் அறுவடை முடிந்து வயலில் காயவைத்து வரும் நெல்மணிகள் முளைக்கும் அபாயம் ஏற்படும்.சேதுபாவாசத்திரம் பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் நீரில் மிதக்கின்றன. இதேபோல் அறுவடை முடிந்து

குவித்து வைக்கப்பட்டுள்ள வைக்கோல் போர்களும் தண்ணீரில் மிதக்கின்றன. மாவட்டத்தில் அதிகபட்சமாக பேராவூரணில் 105.4 மிமீ மழை பதிவாகியுள்ளது.திருவாரூர் மாவட்டத்திலும் நேற்று 2வது நாளாக பரவலாக மழை பெய்தது. தாமதமாக சம்பா சாகுபடி செய்யப்பட்டு தற்போது 40 நாட்கள் ஆன நிலையில் வயல்களில் மழை நீர் தேங்கியுள்ளது. இதனால் பயிர்கள் அழுகுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர். குடவாசல், வலங்கைமான் பகுதிகளில் 500 ஏக்கரில் பருத்தி பயிரிடப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

புதுவையில் குளிர் காற்றுடன்...

கடலோர மாவட்டமான கடலூரிலும், விழுப்புரம் மாவட்டத்திலும் புதுச்சேரியிலும் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. வழக்கமான குளிருடன் லேசான சாரல் மழையும் பெய்தது. காலை 8 மணியில் இருந்து தொடர்மழை பெய்யத் தொடங்கியது. இதனால், பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் அவதிப்பட்டனர். நேற்று காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும் புதுவையில் 2.5 மிமீ மழை பதிவானது. மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே முகத்துவாரம் ஆழப்படுத்தும் பணி நடைபெறுவதால் விசைப்படகு மீனவர்கள் 1 மாதமாக மீன்பிடிக்க செல்லவில்லை. கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்று வந்தனர். நேற்று கடல் சீற்றத்துடன் காணப்பட்டதால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை..

## நெல்லை, தூத்துக்குடியில் விடியவிடிய பெய்ததால் அறுவடை பணிகள் பாதிப்பு



நெல்லை: நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் இரு தினங்களாக பெய்து வரும் மழையால் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் கடந்த காலங்களில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கடும் வறட்சி தாக்கியது. கார், பிசானம் ஆகிய இரு சாகுபடிகளுமே பொய்த்தது. விளைநிலங்கள் தரிசாக மாறின. நெல்லை மாவட்டத்தில். இந்த

ஆண்டு 42 ஆயிரம் ஹெக்டேராக சாகுபடி சுருங்கி போனது.இந்நிலையில் அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர் பகுதியில் நேற்று இரவு முழுவதும் விடிய விடிய மழை பெய்தது. இதனால் அறுவடை செய்யும் பருவத்தில் இருந்த நெற்பயிர் சாய்ந்த நிலையில் காணப்படுகின்றன. பல இடங்களில் வயலில் மழை நீர் தேங்கி நெற்பயிர் நீரில் மூழ்கின. அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.கங்கை கொண்டான், பாலாமடை, ராஜவல்லிபுரம் பகுதிகளில் இரு தினங்கள் மழை பெய்தால், நெற்மணிகள் முளைத்துவிடும் என விவசாயிகள் அஞ்சுகின்றனர்.இது குறித்து நெல்லை மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் வேலுமணி கூறுகையில், ‘‘2 ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவுகிறது. வறட்சி நிவாரண தொகை கிடைக்காத ஏக்கத்தில் இருந்த விவசாயிகளை தற்போது பெய்த மழை பாதித்து வருகிறது. அறுவடை நேரத்தில் மழை இப்படி பெய்தால் விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவர். தண்ணீர் இல்லாமல் தீய்ந்த நெல்பயிர்களை வயல்களில் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு வைக்கோல் கூட மிஞ்சாது. இயற்கையால் பாதிக்கப்பட்டு வரும் விவசாயிகளுக்கு உதவிக்கரம் நீட்ட அரசு முன்வர வேண்டும். என்றார்.அதே சமயம் பிசான சாகுபடியை மேற்கொள்ளாமல், வயல்களை தரிசாக போட்டிருந்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தற்போது பெய்யும் மழையை பயன்படுத்தி உளுந்து பாவும் எண்ணத்தில் அவர்கள் வயல்களில் தண்ணீரை அடைக்கட்டி வருகின்றனர்.

## மா, நெல்லி பரப்பளவை அதிகரிக்க புதிய தோட்டங்கள் அமைக்க முன்னுரிமை

திண்டுக்கல், : மாவட்டத்தில் மா, நெல்லி பயிர்கள் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில் புதிய தோட்டங்கள் அமைக்க தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் முன்னுரிமை தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் வழங்கப்படுகிறது

காந்திகிராம பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் மகசூலைப் பெருக்குவதற்கான பயிற்சி முகாம் நடைபெற்றது.

உதவி இயக்குநர் கிஷோர்குமார் வரவேற்றார்.

கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்துப் பேசியதாவது: தாங்கள் பயிரிடும் பயிர்கள் தற்சமயம் காற்று, மழை, தட்பவெப்பசூழ்நிலை காரணமாக மாறுபடுகிறது. தற்போது சராசரி மழையளவைவிட இம்முறை குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கபப்ட்டுள்ளனர். விளைபொருட்களின் உற்பத்தியும் குறைந்துள்ளது.

வரும்காலத்தில் இது போன்ற நிலையைத் தவிர்ப்பதற்கு மாற்றுப்பயிர்கள் விவசாயம் செய்ய

வேண்டியதின் அவசியம். அதற்கான வழிமுறைகள் குறித்து விவசாயிகள் தெரிந்து செயல்பட வேண்டும்.

நம்நாட்டைப் பொறத்தளவில்பெய்யும் மழையை சேகரித்து  விவசாயம் செய்கிறார்கள். உலகத்தில் பல்வேறு நாடுகளில் குறைந்தளவு தண்ணீரைப் பயன்படுத்தி அதிக மகசூல் செய்கிறார்கள். இவற்றை நாமும் தெரிந்து கொண்டு செயல்படவேண்டும்.

பயிர்களின் முக்கியநோக்கம் தோட்டக்கலை பயிர்களான பழங்கள், காய்கறிகள், காளான்கள் போன்ற ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் இந்த பயிற்சி முகாமை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மாவட்டத்தில் மா, நெல்லி பயிர்கள் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில் புதிய தோட்டங்கள் அமைக்க தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் முன்னுரிமை தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் வழங்கப்படுகிறது இவ்வாறு அவர் பேசினார்.

காந்திகிராம  வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் கோபால் வாழ்த்துரை வழங்கினார். தோட்டக்கலைத்துறை துணை இயகஅகுநர் சந்திரசேகர் திட்ட விளக்கஉரையாற்றினார். உதவி  இயக்குநர்கள்  சீனிவாசன், பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்ப செயல்விளக்கம்

திண்டுக்கல், : சாணார்பட்டி வட்டார வேளாண்மை மையம் சார்பில் அட்மாதிட்டத்தின்கீழ் முன்னோடி விவசாயிகள் 50பேர் பட்டறிவுப்பயணமாக காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம் மற்றும் வாடிப்பட்டி உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்துச்  செல்லப்பட்டனர்.

அங்கு தொழில்நுட்ப வல்லுநர் செந்தில்குமார் விவசாயிகளுக்கு தென்னைமரம் ஏறும் கருவி மூலம் மரம் ஏறுவது குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார். தோட்டக்கலைப் பண்ணை மேலாளர் வடிவேல் மா,எலுமிச்சை, குரோட்டன்ஸ், ஆமணக்கு போன்வற்றிற்கு வின்பதியம் செய்யும் முறைகள், பராமரிப்பு முறைகள் குறித்து விளக்கம் அளித்தார்.

வாடிப்பட்டியில் பிரிமியர் விதை உற்பத்தி நிலையத்தின் மேலாளர் பாபுசரவணன்  நெல்விதை நேர்த்தி செய்யும் முறை குறித்து விளக்கினார். ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, தொழில்நுட்ப வல்லுநர்கள் தமிழரசு உட்பட பலர் செய்திருந்தனர்.

## பருவ?மழை பொய்த்தது வறண்டு வரும் குளங்கள் விவசாயிகள் கவலை

கம்பம்,: கம்பம் பகுதியில் பருவமழை பொய்த்ததால் குளங்கள் அனைத்திலும் தண்ணீர் குறைந்து வறண்டு வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முல்லை பெரியாறில் திறந்து விடப்படும் தண்ணீரை நம்பி லோயர்கேம்ப் முதல் வீரபாண்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கம்பம் வீரப்பநாயக்கன்குளம், ஒட்டுக்குளம், கொடம்படிகுளம், கட்டத்தியம்மன்குளம் உள்ளிட்ட குளங்களின் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கரில் இரு போக நெல் சாகுபடி நடக்கிறது.

இந்த குளத்தில் மழைகாலங்களிலும், முல்லை பெரியாறில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும்போதும் இப்பகுதி விவசாயிகள் ஆற்று நீரை குளங்களில் சேமித்து வைத்து பாசனத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாகவே பருவமழை பொய்த்து விட்டது. முல்லை பெரியாறில் அதிகளவு தண்ணீர் வரத்து இல்லை. இப்பகுதிகளின் உள்ள அனைத்து குளங்களும்  வறண்டு வருகின்றன. தற்போது கடந்த சில மாதங்களுக்கு முன் நடவு செய்யப்பட்ட 2ம் போக நெல் பயிர் அறுவடை செய்யும் வரை போதுமான தண்ணீர் வசதி இல்லாததால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்து வருகின்றனர். போதிய மழை பெய்தால் மட்டுமே குளங்களில் தண்ணீர் தேங்கி முறையாக விவசாயம் நடைபெறும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**ராமநாதபுரத்தில் பரவலாக மழை வெள்ளரிக்காய், பாகற்காய் விவசாயிகள் உற்சாகம்**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் பகுதியில் நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் மழையால் வெள்ளிக்காய், பாகற்காய் பயிரிடப்பட்ட விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர்.

வானம்பார்த்த பூமியான ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையை நம்பி விவசாயம் உள்ளது. இந்த ஆண்டு மழை பெய்யாததால் பல ஆயிரம் ஏக்கரில் பயிர்செய்யப்பட்ட நெல் பயிர்கள் கருகியது. சாவியான பயிர்களில் மாட்டு தீவனமாக வைக்கோலுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் ராமேஸ்வரம்,பாம்பன், மண்டபம், உள்ளிட்ட கடலோரப்பகுதியில் மழை பெய்துள்ளது. ராமநாதபுரத்தில் லேசான மழை பெய்துள்ளது. நேற்றும் இப்பகுதியை சுற்றியுள்ள ரகுநாதபுரம், தெற்காட்டூர், வாலாந்தரவை, கீழக்கரை, உள்ளிட்ட பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்துவருகிறது. கோடை வெயில் தாக்கம் குறைந்துள்ளது. ராமநாதபுரம் சக்கரக்கோட்டை கண்மாய், மற்றும் முதுனாள் கிராமம் பெரிய கண்மாய் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் வெள்ளரி மற்றும் பாகற்காய் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது.தற்போது பெய்துவரும் மழையினால் வெள்ளரி மற்றும் பாகற்காய் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது என விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.

## நிலக்கடலை விளைச்சல் குறைவு விவசாயிகள் ஏமாற்றம்

பரமக்குடி, : பரமக்குடியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் நிலக்கடலை விளைச்சல் குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை மானாவாரி பயிராக பயரிடப்படுகிறது. பரமக்குடி, போகலூர், நயினார் கோவில் ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் இப்பயிர் அதிகளவில் பயிரிடப்படுகிறது.

சரியான தருணத்தில் ஜிப்சம் உரம் இட்டால் கூடுதல் மகசூல் பெறலாம் என வேளாண்மை அதிகாரிகள் யோசனை தெரிவித்திருந்தனர்.

இதனை பின்பற்றி பல விவசாயிகள் நிலக்கடலை விவசாயத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், நடப்பாண்டில் நிலக்கடலை விளைச்சல் மிகக்குறைவாக உள்ளது. கடந்த 2011ல் ஒரு கிலோ ரூ. 10 முதல் 15 வரை விற்பனை செய்யப்பட்டது. 2012ம் ஆண்டு ரூ.20 முதல் 25 வரை விற்பனை செய்யப்பட்டது.

இந்த வருடம் மழை இல்லாததால் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரிக்க வாய்ப்புள்ள போதிலும் செய்த செலவுக்கு ஏற்ற லாபம் கிடைக்கவில்லையென விவசாயிகள் கூறினர்.

இதுகுறித்து விவசாயி சுரேஷ் கூறுகையில், ‘‘3 மாத காலத்திற்குள் நிலக்கடலையை அறுவடை செய்து விடுவோம்.

குறிப்பிட்ட காலத்திற்குள் உரம் இட்டும் இந்த வருடம் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ நிலக்கடலையை கொடுத்தால் வாங்கும் வியாபாரிகள் நிலக்கடலையை சுற்றியுள்ள மணல் எடையை கழித்து முக்கால் கிலோவிற்கே பணம் தருகின்றனர்.

நிலக்கடலை விவசாயத்தில் எதிர்பார்த்த அளவிற்கு லாபமும் இல்லை. விளைச்சலும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது. இந்தாண்டில் கிலோ ரூ 30 முதல் 35 வரை விற்கப்படுகிறது.

இருப்பினும், விளைச்சல் இல்லாததால் எதிர்பார்த்த அளவிற்கு லாபம் இல்லை,’ ’என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

7.03.2013 A.M

## தேனி சுற்றுவட்டார பகுதிகளில் நெல் வயல்களில் வெள்ளரி சாகுபடி அதிகரிப்பு விவசாயிகள் ஆர்வம்

தேனி,

தேனி சுற்றுவட்டார பகுதிகளில் நெல் சாகுபடி வயல்களில் தற்போது வெள்ளரி சாகுபடி செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி உள்ளனர்.

குறுகிய கால பயிர்கள்

தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை காலம் கடத்திச் சென்று பொய்த்துப் போனது. வட கிழக்கு பருவமழையும் போதிய அளவில் பெய்யாமல் ஏமாற்றியது. இதனால் தேனி மாவட்டத்தில் நெல் சாகுபடி பெரும் பாதிப்பை சந்தித்து உள்ளது. கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வழக்கத்திற்கும் குறைவாகவே நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்டது.

வீரபாண்டி பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் இரு போக சாகுபடி செழிப்புடன் நடைபெறும். இந்த முறை போதிய தண்ணீர் இல்லாத தால் ஒரு போக நெல் சாகுபடி மட்டுமே நடந்தது. நெல் நடவு செய்து அறுவடை செய்ய 125 நாட்கள் முதல் 130 நாட்கள் வரை தேவைப்படும். மேலும் நெற் பயிருக்கு தண்ணீரும் அதிகளவில் தேவைப்படும். இதனால் தற்போது குறுகிய காலத்தில் மகசூல் கிடைக்கும் பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி உள்ளனர்.

வெள்ளரி சாகுபடி

வீரபாண்டி கவுமாரியம்மன் கோவில் சித்திரை திரு விழாவை கருத்தில் கொண்டும், கோடைகால தேவையை கருத் தில் கொண்டும் தேனி சுற்று வட்டாரத்தில் நெல் சாகுபடி வயல்களில் வெள்ளரிக்காய், தர்பூசணி போன்ற வற்றை விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

வெள்ளரி செடிகளுக்கு தண்ணீர் தேவை மிகவும் குறைவு என்பதாலும், கோடை காலத்தில் விற்பனை அதி கரிக்கும் என்பதாலும் வீர பாண்டி பகுதியில் நெல் சாகுபடி வயல்களில் வழக்கத்

திற்கும் அதிக அளவில் வெள் ளரி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்த வெள்ளரி செடி களில் தற்போது அதிக அள வில பூக்கள் பூத்து உள்ளன. இதனால் விளைச்சலுக்கு ஏற்ப விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## அரசின் வேளாண்மை திட்டங்களுக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு நேரில் ஆய்வு செய்த பிறகு கலெக்டர் சி.சமயமூர்த்தி பேட்டி



நெல்லை

அரசின் வேளாண்மை திட்டங்களுக்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு உள்ளது என்று விவசாய நிலங்களை நேரில் ஆய்வு செய்த பிறகு கலெக்டர் சி.சமயமூர்த்தி கூறினார்.

**கலெக்டர் ஆய்வு**

நெல்லை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மைத் திட்டங்கள் குறித்து மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி நேற்று ஆய்வு செய்தார்.

மாறாந்தை கிராமத்தில் எச்.வசந்தகுமார் என்ற விவசாயி 12½ ஏக்கரில் எலுமிச்சை, நெல்லி ஆகியவை பயிரிட்டு உள்ளார். அவருக்கு அரசின் திட்டங்கள் கிடைத்தது குறித்தும், சொட்டு நீர் பாசனம் எந்த அளவுக்கு உதவியாக இருக்கிறது என்பது குறித்தும் கலெக்டர் சமயமூர்த்தி கேட்டு அறிந்தார்.

பின்னர் கரும்புளியூத்தில் தேனீ வளர்க்கும் முறையை பார்வையிட்டார். அப்போது தேனீ வளர்ப்பு, அதன் வருமானம் உள்ளிட்டவை குறித்து விவசாயிகளிடம் கேட்டு அறிந்தார். தேனீ வளர்ப்பது, தேன் கூட்டில் இருந்து தேனை எப்படி பிரித்து எடுப்பது குறித்து கலெக்டர் முன்னிலையில் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**சுரைக்காய் சாகுபடி**

கரும்புளியூத்தில் 12½ ஏக்கரில் தங்கமணி நாடார் என்ற விவசாயி சுரைக்காய் சாகுபடி செய்து உள்ளார். சொட்டுநீர் பாசனத்தில் இந்த சாகுபடியை அவர் மேற்கொண்டு உள்ளார். அவரது தோட்டத்துக்கு கலெக்டர் சமயமூர்த்தி சென்று பார்வையிட்டார்.

அப்போது தோட்டத்துக்குள் இறங்கி, சொட்டு நீர் பாசனம், சுரைக்காய்க்கு சந்தை நிலவரம் உள்ளிட்டவை குறித்து விவசாயிகளிடம் கேட்டு அறிந்தார்.

இதைத் தொடர்ந்து வேளாண்துறையின் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் ஆலங்குளம் அருகே உள்ள அய்யனார்குளத்தில் 2½ ஏக்கரில் துவரை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. துவரை சாகுபடி முறை குறித்து, அந்த தோட்டத்து விவசாயியிடம் கேட்டார். அதற்கு அவர்கள், சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிட்டு உள்ளோம். அதனால் நல்ல பலன் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**திசு வாழை மையம்**

ஐந்தாங்கட்டளை கிராமத்தில் திசு வாழை கன்று உற்பத்தி நிறுவனம் ஒன்று தொடங்கப்பட்டு உள்ளது. அந்த நிறுவனத்துக்கு கலெக்டர் சமயமூர்த்தி மற்றும் தோட்டக்கலை அதிகாரிகள் நேரில் சென்றனர்.

திசு வாழை வளர்க்கும் முறை, மகசூல், சந்தை நிலவரம் உள்ளிட்டவை குறித்து கேட்டு அறிந்தார்.

**விவசாயிகளிடையே வரவேற்பு**

பின்னர் கலெக்டர் சமயமூர்த்தி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு வேளாண்துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக தோட்டக்கலை மூலம் ஏராளமான திட்டங்கள் மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. தோட்டக்கலைத்துறையில் சொட்டு நீர் பாசனம் என்பது விவசாயிகளுக்கு நீர் சிக்கனத்தை கொடுக்கிறது. உரச்செலவை குறைத்து அதிக லாபத்தை தருகிறது.

இதுவரை எலுமிச்சை, நெல்லி சாகுபடி செய்து உள்ள விவசாயியையும், துவரை தோட்டத்தையும் பார்வையிட்டோம். அந்த விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் விதைகள் செடிகள் குறித்து அவர்களிடம் கேட்டு அறிந்தோம். அப்போது வேளாண் துறையின் திட்டங்கள்

விவசாயிகளிடையே நல்ல வரவேற்பை பெற்று உள்ளன. இதேபோல் விவசாயிகள் இன்னும் பல வேளாண் திட்டங்களை பெற்று பயன் அடைய வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் சி.சமயமூர்த்தி கூறினார்.

ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.அமானுல்லா, வேளாண்மை இணை இயக்குனர் சவுந்தரராஜன், தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் ஜெயபாரதி மாலதி (நெல்லை), தமிழ்வேந்தன் (பாளையங்கோட்டை), பாலகிருஷ்ணன் (முக்கூடல்), கிருபாகரன் (ஆலங்குளம்), தோட்டக்கலை அலுவலர் இளங்கோ, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதிமாறன், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நவாஸ்கான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் பேராசிரியை விளக்கம்

நெல்லை

வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண் உதவி பேராசிரியை ரஜினிமாலா விளக்கம் அளித்து உள்ளார்.

பயிர் நோயியியல் துறை உதவி பேராசிரியர் ரஜினிமாலா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

**வாடல் நோய்**

நெல்லை மாவட்டத்தில் அம்பை, சேரன்மாதேவி, முக்கூடல், இடைகால் ஆகிய இடங்களில் பயிரிடப்பட்டுள்ள வாழையில் வாடல்நோய் தாக்கம் உள்ளது.

இந்த நோய் தாக்கப்பட்ட வாழையில் ஆரம்பத்தில் அடி இலையின் ஓரங்கள் மஞ்சளாக காணப்படும். நாளடைவில் இந்த மஞ்சள் நிறம் இலையின் மையப்பகுதி அல்லது நடுநரம்பிற்கு பரவி கடைசியில் இலை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறுகின்றது.

பின்பு இந்த மஞ்சள் நிறமானது. அடி இலையில் இருந்து மேல் இலைகளுக்கும் பரவி, வாழை மரத்தில் உள்ள அனைத்து இலைகளும் மஞ்சள் நிறமாக மாறிவிடுகின்றன.

**துர்நாற்றம் வீசும்**

பாதிக்கப்பட்ட மரத்தின் அடி இலைகள், இலைகாம்பு பகுதியில் ஒடிந்து தண்டை சுற்றி தொங்குகின்றன. இந்நோய் தாக்கப்பட்ட வாழையின் அடிக்கிழங்கை குறுக்காக வெட்டிப்பார்த்தால், அதில் நீர் மற்றும் சத்துக்களை கடத்தக்கூடிய சாற்றுச் குழாய் தொகுப்பு, மஞ்சள், பழுப்பு, கறுப்பு போன்ற நிறங்களில் காணப்படும்.

இறுதியில் நோய் தாக்கப்பட்ட மரம் அழுகி துர்நாற்றம் வீசும், பொதுவாக இந்நோய் பாதிக்கப்பட்ட வாழை மரத்தில் தார்கள் ஈனுவதில்லை.

அப்படியே தார் வந்தாலும் காய்கள் மிகவும் சிறுத்தும், குறைந்த எண்ணிக்கையிலும் காணப்படும். இக்காய்களும் ஒரே சீராக பழுப்பது இல்லை. சதைப்பகுதியும் ருசி இல்லாமல் அமில சுவையாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறை**

வாழையை தொடர்ந்து சாகுபடி செய்யாமல், நெல், கரும்பு போன்ற பயிர்களை ஓரிரண்டு ஆண்டுகள் சாகுபடி செய்த பின் வாழை நடவு செய்யலாம். எங்கு எல்லாம் நோயின் தாக்குதல் இருக்கிறதோ, அந்த நிலங்களில் மாற்று ரகங்களான பூவன், பச்சை வாழை, நேந்திரன், செவ்வாழை ஆகியவற்றை சாகுபடி செய்யலாம்.

நோயற்ற கன்றுகளை தேர்வு செய்ய வேண்டும். அக்கன்றுகளை நடுவதற்கு முன் அவற்றின் கிழங்குகளை 0.2 சதவீதம் கார்பென்டாசிம் (ஒரு லிட்டருக்கு 2 கிராம்) கரைசலில் 30 நிமிட நேரம் மூழ்க வைத்து பின்பு நிழலில் உலர வைத்து நடவு செய்ய வேண்டும்.

ஓரிரண்டு வாழைகளில் நோயின் அறிகுறி தென்பட்ட உடன், அனைத்து வாழை மரங்களுக்கும் கார்பென்டாசிம் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம்) மருந்தை, ஒரு வாழை மரத்துக்கு 2 லிட்டர் என்ற அளவில் மரத்தை சுற்றி மண்ணில் ஊற்ற வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் உதவி பேராசிரியை ரஜினிமாலா தெரிவித்து உள்ளார்.

## விழுப்புரம் மாவட்டத்தில் பலத்த மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

விழுப்புரம்,

விழுப்புரம் மாவ ட்டத்தில் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பலத்த மழை

இலங்கை அருகே மேற்கு வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் கடலோர மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.

கடந்த 2 நாட்களாக விழுப்புரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் வெயில் தாக்கமின்றி குளிர்ந்த காற்றுடன் கருத்த மேகத்துடன் இருந்தன. நேற்று அதிகாலை விழுப்புரத்தில் லேசான மழை பெய்தது. காலை 9 மணிக்கு திடீரென்று பலத்த மழை பெய்தது. 15 நிமிடங்கள் பெய்த இந்த திடீர் மழை யினால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தாலும் தேர் வுக்கு சென்ற மாணவர்கள் மற்றும் வேலைக்கு சென்ற அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.
பின்னர் காலை முதல் மதியம் வரை தூரல் மழை பெய்து கொண்டே இருந்தது. மாலையிலும் சாரல் மழை நீடித்தது.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் வானம் மேகமூட்டமாக காட்சி அளித்தது. மாலை திடீரென்று லேசான மழை பெய்தது. ஆனால் நீண்ட நேரம் நீடிக் கவில்லை. இந்த நிலையில் 2-வது நாளாக நேற்றும் வாகனம் மப்பும் மந்தார முமாக காட்சி யளித்தது. காலை 8 மணிக்கு லேசான மழை பெய்தது. தொடர்ந்து அவ்வப்போது தூரல் விழுந்தது.

மாலை 3 மணிக்கு திடீ ரென்று மழை கொட்டியது. 2 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த பலத்த மழையால் சாலையோர குட்டை, பள்ளங்களில் தண்ணீர் தேங்கியது. தாழ் வான பகுதியில் மழைநீர் சூழ்ந்ததால் மக்கள் அவதிப்பட்டனர்.

இதேபோல் சின்னசேலம், தியாகதுருகம், கல்வ ராயன்மலை, சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு, பகண்டை கூட்ரோடு ஆகிய பகுதியிலும் மழை பெய்தது. திடீர் மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டிவனம்

திண்டிவனம் பகுதியில் இந்த ஆண்டு பருவ மழை போதிய அளவு பெய்யவில்லை.
இருந்தபோதிலும் ஏரியில் தேங்கிய நீர் மற்றம் நிலத்தடி நீரை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்தனர். பெரும்பாலான விவசாயிகள் நெல்லிற்கு பதிலாக மணிலா, காய்கறிகள் உள்ளிட்டவை களை பயிரிட்டனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கோடை வெயிலை போல வெயில் சுட்டெரித்து மக்களை வாட்டி வதைத்து வந்தது. இந்த நிலையில் நேற்று காலையில் வானில்

கருமேக கூட்டங்கள் கூடியது. பின்னர் காலை 9.30 மணிக்கும், 11 மணிக்கும் திண்டிவனம் பகுதியில் பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக சாலையில் மழைநீர் ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இந்த திடீர் மழையின் காரணமாக பள்ளி, கல்லூரிக்கு சென்ற மாணவ, மாணவிகள் குடை பிடித்தபடி சென்றனர். திண்டிவனம் பகுதியில் பெய்துள்ள இந்த திடீர் மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

உளுந்தூர்பேட்டை

உளுந்தூர்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று அதிகாலையில் இருந்து சாரல் மழை பெய்தது. இதைத் தொடர்ந்து ஓரளவு நல்ல மழையும் பெய்தது. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகினர். 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத வந்த மாணவ, மாணவிகள் மழையில் நனைந்தபடி தேர்வு மையங்களுக்கு சென்றனர்.
இதனிடையே தற்போது இந்தப்பகுதியில் நெல் அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருவதால் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்காக உளுந்தூர் பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் இருந்து விவசாயிகள் உளுந்தூர் பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு சுமார் 25ஆயிரம் நெல் மூட்டைகளை கொண்டு வந்தனர். அவற்றை எடை போடுவதற்காக திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந் ததால் நெல் மூட்டைகள் மழையில் நனைந்தது. இதில் சுமார் 5 ஆயிரம் நெல் மூட்டைகள் சேதமானது.

செஞ்சி

செஞ்சி பகுதிகளில் நேற்று காலை திடீரென மழை பெய்தது. இதனால் மார்க்கெட் கமிட்டியில் விற்பனைக்காக கொண்டு வந்த 7 ஆயிரம் நெல் மூட்டைகள் மழையில் நனைந்தன. இதனையறிந்த வியாபாரிகள் ஆட்களை வைத்து லாரிகளில் ஏற்றி எடுத்து சென்றனர். இதனால் விவசாயிகளுக்கோ, வியாபாரி களுக்கோ பாதிப்பு இல்லை. ஒரு சில நெல்மூட்டைகள் மழையில் நனைந்து நாசமானது.

மேல்மலையனூர்

மேல்மலையனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதி களில் காலை 11.45 மணி யிலிருந்து 12.05 மணி வரை திடீரென மழை பெய்தது. தொடர்ந்து சாரல் மழை தூறிக்கொண்டே இருந்தது. அவலூர் பேட்டை யிலும் லேசான மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதி களில் தண்ணீர் தேங்கியது.

இதேபோல் விக்கிரவாண்டி, திருக்கோவிலூர்,வானூர், மரக்காணம் உள்ளிட்ட மாவட் டத்தின் அனைத்து பகுதி களிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. இதனால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 45 குவிண்டால் சோளம் ஏலம்

திருப்பூர்,

திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 45 குவிண்டால் சோளம் ஏலம் விடப்பட்டது.

விவசாய விளை பொருட்கள் ஏலம்

திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ் வொரு வாரமும் செவ்வாய் கிழமை காலையில் பருத்தி ஏலமும், மாலையில் விவசாய விளை பொருட்களான பயிறு, தானிய வகைகளுக்கான ஏலமும் நடைபெறுவது வழக்கம். கடந்த ஒரு ஆண்டு காலமாகவே மழை இல்லாததாலும், தண்ணீர் வசதி குறைந்து விட்டதாலும் உற்பத்தி இல்லாமல் ஏலம் நடைபெறாமல் இருந்தன. பருத்தி ஏலம் அடியோடு நின்று விட்ட நிலையில் விவசாய பயிர்களுக்கான ஏலம் மட்டும் கடந்த ஒரு சில வாரங்களில் நடைபெற்றது.

மானாவாரி சோளம்

நேற்று முன்தினம் நடை பெற்ற ஏலத்திற்கு விவசாயிகள் வரமிளகாய், கம்பு, சோளம், தேங்காய் ஆகியவற்றை கொண்டு வந்திருந்தனர். அந்த வகையில் வரமிளகாய் 25 குவிண்டாலும், கம்பு 30 குவிண்டாலும், மானாவாரி சோளம் 45 குவிண்டாலும், தேங்காய் 30 குவிண்டாலும் வந்திருந்தது. ஏலத்தில் வரமிளகாய் குவிண்டால் ரூ.4 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை யிலும், கம்பு ரூ.1200 முதல் ரூ.1300 வரையிலும், மானா வாரி சோளம் ரூ.1500 முதல் ரூ.1600 வரையிலும், 100 தேங் காய் ரூ.800 முதல் ரூ.900 வரையிலும் ஏலம் போனது.

பயிர் உற்பத்தி பாதிப்பு

இது குறித்து திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சண்முகம் கூறியதாவது:

இந்த சீசன் பயிர்கள் விளைய வேண்டிய காலம் ஆகும். ஆனால் பயிர் உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டு மிக குறைந்த அளவே ஏலத்திற்கு வந்திருந்தது. ஏலத்திற்கு பல்லடம், செஞ்சேரிமலை, உடுமலை, சுல்தான்பேட்டை பகுதி விவசாயிகள் 10 பேரும், அவினாசி, பெருந்துறை பகுதி வியாபாரிகள் 5 பேரும் கலந்து கொண்டனர். தற்போது மக்காசோளம் 50

டன்னும், மஞ்சள் 40 டன்னும், நெல் 30 டன்னும் ஒழுங்குமுறை விற்பனை கூட குடோன்களில் இருப்பு வைக் கப்பட்டு உள்ளது. அதற்கான விலை வரும் போது விற்று விடுவதாக சொல்லி விவ சாயிகள் இந்த இருப்பு வகை களுக்கு பொருளீட்டு கடன் பெற்று சென்றுள்ளனர். இவ்வாறு ஒழுங்குமுறை விற்பனை கூட கண் காணிப்பாளர் சண்முகம் தெரிவித்தார்.